உ

ஸ்ரீ வாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை ௪.	1916-ம் ஆூ ஆகஸ்ட், செப்டம்பர் மீ	இதழ் அ - கூ.

இலௌகிகப் பகுதி.

தமிழும், ஆரியமும்.

தமிழும் ஆரியமும் இன்னகாலத்தில் ஏற்பட்டதென்று சொல்ல எவராலும் இயலாது. தமிழிற்கும் ஆரியத்திற்கும் பரமசிவனே முதலாசிரியரென்று புராணங்கள் புகலுகின்றன. தமிழும் ஆரியமும் பிறமொழிகள் போலாது, பாணினியாரும் அகத்தியனாரும் முதலிய முனிவர்களாலே செய்யப்பட்ட இலக்கண நூல்களால் சீர்திருந்தியிருக்கின்றனவென்றும், ஆரியம், பிராகிருதம் முதலியவற்றிற்கும், தமிழ், ஆந்திர முதலியவற்றிற்கும் முதன்மையாக நிற்கின்றனவென்றும் ஆன்றோர் அறைகின்றனர். இவ்விருமொழியும் தொன்றுதொட்டே சான்றோர்களால் தழுவப்பட்டு ஒப்புயர்வற்று விளங்குகின்றன. இவ்வுண்மை பின்வரும் செய்யுளை உற்று நோக்குவார்க்குத் தெற்றெனத் தெரியும்.

காஞ்சிப்புராணம்.

இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப
விருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பு

மிருமொழியு மான்றவரே தமிழினு மொன்றுலிவ்
விருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ.

இத்துணைப் பெருஞ் சிறப்புவாய்ந்த இவ்விரு மொழி களுக்கும் மிக நீண்டகாலமாகவே நெருங்கிய உறவேற்பட்டுள்ள தென்பது எவரும் மறுக்கமுடியாத வுறுதி. இவ்விரண்டிற்கு முள்ள உயர்வையும் ஒப்பாந்தன்மையையும் "முத்தமிழு நான் மறையு மானன் கண்டாய்" என்ற அப்பமூர்த்திகள் உண்மைத் திருவாக்கே நன்கு விளக்கும். நிற்க.

சிலகாலமாக, ஆரியமொழியிற் பற்றுள்ள சிலர், ஆரியமே முதன்மை பெற்றதென்றும், அதினின்றே மற்றவை வந்தன வென்றும், ஆதலின் அதுவே உயர்ந்ததென்றும் கூறுகின்றனர். தமிழ்ப்பற்றுள்ள சிலர், தமிழே தலைமைபெற்றதென்றும், அதி னின்றே பிறமொழிகள் பிறந்தனவென்றும், ஆதலின் அதுவே சிறந்ததென்றும் அறைகின்றனர். இவ் வழக்குப் பயனுடைய தாமா என்பதை முதற்கண் ஆராய்வோம்.

தென்மொழியும் வடமொழியும் இன்னகாலத்தில் ஏற் பட்டதென்று சொல்லமுடியாது என்பதை முன்னரே மொழிந் திருக்கின்றோம். இருக்கட்டும். எது முற்பட்டதா யிருந்தாலு மென்ன? முற்பட்டதனாலேயே ஒன்று உயர்வுபெற முடியுமா? ஒரு குடும்பத்தில் முன் பிறந்தவனே உயர்ந்தவனாகவும், பின் பிறந்தவனே தாழ்ந்தவனாகவும் இருக்கக் காண்கிலம். முன் பிறந்தவன் மூடனாயிருத்தலும் பின் பிறந்தவன் அறிவுடையனா யிருத்தலும் உலகிற் கண்கூடு. பயனைக்கொண்டு ஒன்றுக்கு உயர்வு கற்பிக்கவேண்டுமேயன்றி, முன் பின் என்ற முறையைக் கொண்டு கற்பித்தல் சரியன்று. ஆகவே, ஒரு மொழி முன் தோன்றியதனாலேயே உயர்வடையுமென்பதும், பின் தோன்றிய தனாலேயே தாழ்வடையுமென்பதும் அறிவுடையார் ஒப்புக் கொள்ளத் தக்கதன்று.

ஒன்றிலிருந்து மற்றொன்று வந்ததாகவே வைத்துக் கொள்ளுவோம். எதிலிருந்து எது பிறந்தாற்றானென்ன? பிறப் பிடத்தின் பெருமை அதினின்று பிறந்ததற்கில்லாமற்போகுமா?

அதுதான் என்ன நியமம்? தாழ்ந்த இடத்தினின்றும் உயர்ந்த பொருள் பிறத்தலில்லையா? உயர்ந்த இடத்தினின்றும் தாழ்ந்த பொருள் பிறத்தலில்லையா? ஆகவே பிறந்தது தாழ்ந்தது, பிறப்பிடம் உயர்ந்தது என்று சொல்லுவதும் சரியல்ல.

தமிழ், வடமொழி என்ற இரண்டனுள் எதை உயர்ந்ததென்று சொல்லலாம்? தென்மொழி பயின்ற சான்றோர்களையும், வடமொழி பயின்ற சான்றோர்களையும் கணக்கிட முடியுமா? அவர்களனைவரும் இறைவனருளை யெய்தவில்லையா? உறுதிப் பொருள்களை யடையவில்லையா? இறைவனருளை யெய்துவதற்கும் உறுதிப் பொருளை யடைவதற்கும் ஒரு மொழி காரணமன்று. அவரவர்கள் அறிவும் உழைப்பும் ஊக்கமுமே காரணமாகும். மொழிநடையினும், தமிழும் ஆரியமும், அழகு, சுவை முதலிய வற்றால் ஒன்றற்கொன்று குறைபாடுடையனவன்று என்றும், வேறுபட்ட சிற்சில பொருட்களால் ஒவ்வொன்றும் மேன்மை பெற்றுள்ளனவென்றும் பெரியோர் கூறுவர். மேலும், தென்மொழியும் வடமொழியும் கலைமகளுக்கு இரண்டு கண்கள் என்று கற்ற கேட்ட பெரியோர் கழறுவாரானால் நாம் எந்த விழியை யிழித்துரைப்பது?

> ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது
> சீரிய தென்றொன்றைச் செப்பரிதால் — ஆரியம்
> வேத முடைத்துத் தமிழ்திரு வள்ளுவனா
> ரோது குறட்பா வுடைத்து.

என்று சங்கப்புலவர்களுள் ஒருவராகிய வண்ணக்கஞ்சாத்தனார் என்ற பெரியோரே வழுத்துவாரானால், வடமொழி தென்மொழிகளின் உயர்வு தாழ்வுகளைப்பற்றிப் பேசுதற்கு நாம் தகுதியுடையோமா என்பதோடு இதனை விடுக்கின்றேம்.

ஆரியாவர்த்தத்திலிருந்து வந்தவர்கள் ஆரியர்கள்; அவர்கள் இங்கு வந்து தமிழர்களை வென்று தமிழ்நாட்டில் தங்கள் ஆதிக்கத்தை நிலைக்கச் செய்துகொண்டார்கள்; பின்னர்த் தமிழர்களும் அவர்களும் ஒன்றுசேர்ந்துவிட்டார்கள்; அவர்களாலேயே

வர்ணபேதங்கள் கற்பிக்கப்பட்டன; அவர்கள் வந்த பிறகே தமிழிற்கு ஆரியக் கலப்பு ஏற்பட்டது — என்பது முதலாகச் சரித்திரக்காரர் முதலிய சிலர் சாற்றுகின்றனர்.

எப்படியிருந்தாலுமிருக்கட்டும்; அதைப்பற்றிய ஆராய்ச்சி இப்போது நமக்கு வேண்டுவதில்லை. தமிழ், ஆரியம் என்ற மொழிகளினால் ஒரு பிரிவு நமக்குள் ஏற்படுவது நன்மையைத் தருமா என்பதே இப்போது நாம் ஆராயவேண்டிய காரியமாகும்.

ஆரியாவர்த்தத்திலிருந்து வந்தவர்கள் ஆரியர்களென்றே வைத்துக்கொள்வோம். அவர்களும் தமிழர்களும் எவ்வளவோ காலமாக ஒற்றுமைப்பட்டு ஒன்றுகூடி ஒரு தேயத்துச் சனங்களாய்விட்டவர்கள். வேதத்தினாலும் மொழி முதலியவற்றாலும் ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களாய்விட்டவர்கள். யாவர்க்கும் ஒன்றாகிய வேதமோ ஆரியத்திலுள்ளது. யாவர்க்கும் நன்மை தீமையான செயல்களனைத்தும் ஆரிய மந்திரங்களால் செய்யப்படுகின்றன. யாவர்க்கும் பேச்சு முதலிய விவகாரங்களோ தமிழிலுள்ளன. (இங்குத் தமிழென்றது மற்ற மொழிகட்கும் உபலட்சணம்.) தாய் தன் குழந்தைகட்குப் பாலோடு ஊட்டுவதும் தமிழ், சிந்தைகளிப்பச் செவிகளிப்ப மக்கள் மழலை மொழிவதும் தமிழ், பாடுவதும் தமிழ், ஆடுவதும் தமிழ், உண்பதும் தமிழ், உறங்குவதும் தமிழ். தமிழைவிட்டால் மக்கட்கு வாழ்க்கையேயில்லை. ஆரியம் இப்போது பேசுமொழியாயில்லாததால், தமிழைவிட்டால் வேத முதலியவற்றிற்குப் பொருளே தெரியாது. பிறமொழிகளைப்பற்றி இங்குப் பேச்சில்லை. இப்படிப்பட்ட நிலைமையில் ஆரியம், தமிழ் என்ற மொழிப்பிரிவேற்படுத்தி நாம் யாரை ஆரியரென்று ஒதுக்குவது? எவரைத் தமிழரென்று விலக்குவது? இது முடியாத காரியம். ஆரியரென்பதும் தமிழரென்பதும் இப்போது ஒரு தேயத்துச் சனங்கட்கே பெயராகும். ஆகவே, இப்பிரிவேற்படுவதனால் நன்மை யுண்டாகுமா? ஒருபோதும் உண்டாகாது. நன்மையுண்டாகாமற் போவதுமட்டுமா? தீமையும் விளையும். எக்காலத்தோ குண கருமங்களைக்கொண்டு, அக்காலத்துக்கு நலந்தருமென்று கருதி ஏற்படுத்தப்பட்ட சாதி

வருணாச்சிரமங்கள், நடவடிக்கையின்றி வெறுஞ் சொன்மாத்திரமாக நின்று உயர்வு தாழ்வுகளைக் கற்பித்து ஒற்றுமையைக் கெடுத்துக்கொண்டிருக்கும் இக்காலத்தில், இம்மொழிப் பிரிவு ஒன்றும் ஏற்படுமானால் அது நன்மையைத் தருமா என்று நீங்களே நினைத்துப் பாருங்கள். இன்னும் ஒற்றுமையைக் கெடுத்துத் தீமையைத்தான் உண்டாக்கும். இதில் ஐயமேயில்லை.

இப்பிரிவு பேசப்படுதற்குக் காரணம், ஆரியத்திற் பற்றுள்ள சிலர் தமிழை அவமதிப்பதேயாகும். எல்லாம் ஆரியத்திலிருந்து வந்தவையென்றும், தமிழிற்கு ஒரு தகுதியும் இல்லையென்றும் இவர்கள் தப்பெண்ணம் கொண்டிருக்கின்றார்கள். தமிழை விட்டு இவர்கள் வாழ்க்கை நடைபெறுமானால், அப்போது இவர்கள் பேச்சு பொருளுடையதா என்று ஆராயப்படும். தமிழை விட்டால் வேறு கதியில்லாத இவர்கள் அத்தமிழை அவமதிப்பது எவ்வளவு அறியாமையாகும்! அன்றியும், ஆரியமொழி தங்கட்கே யுரியதென்று இவர்கள் எண்ணுகின்றார்கள். ஆரியம் இவர்கட்குமட்டும் எப்படி உரிமைப்பட்டதோ அறிகிலேம். அதைப்பற்றிப் பின்னொருமுறை பேசுவோம்.

தமிழ் பேசுகிறவர்களே நன்றிமறந்தவர்களைப்போல் தமிழைப் பழிப்பது கண்டு, தமிழ்ப் பற்றுள்ள சிலர் அவர்களையெதிர்க்கின்றார்கள். தமிழிற்கு உயர்வு கூறுகின்றார்கள். உயர்வு கூறட்டும். இவர்கட்கு வேதமந்திரங்களெல்லாம் வடமொழியிலிருப்பதால், இவர்கள் வடமொழியைத் தாழ்வுபடுத்தல் முடியாது. வடமொழிவேதத்தைவிட்டால் இவர்கட்கு வேறு விதியில்லை. பண்டைக்காலத்துப் பெரியோர்களெல்லாம் தமிழ் ஆரியம் என்ற இரண்டையும் ஒப்ப நோக்கியிருக்கின்றார்களேயன்றி ஒன்றுக்கொன்று தாழ்வுபடுத்திக் கூறவில்லை.

மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் சேதுபதி மன்னரவர்கள், சின்னாள் முன்னர், ஓர் தமிழ்ச் சங்கத்தில் தலைமை வகித்துத் தமிழைப்பற்றிப் பேசியபோது, தமிழ் பயின்றோர்களும் ஆரியம் பயின்றோர்களும் நீண்டகாலமாகவே உறவுகொண்டு

ஒற்றுமைப்பட்டு வாழ்ந்து வருகின்றார்களென்றும், அது கெடும்படி இம்மொழிப் பிரிவு ஏற்படுத்துவது சரியல்லவென்றும் சொல்லி, அது காரணமாகத் தமிழ்ப் பற்றுள்ள சிலரைப்பற்றிக் குறைகூறியதாகவும் தெரியவருகிறது. அங்ஙனம் ஆசாரவர்கள் பேசிய பேச்சு யாவரும் மதிக்கவும் பின்பற்றவும் தகுந்ததே. அவர்கள் தமிழ்ப் பற்றுள்ள சிலரைப்பற்றிக் குறைகூறியது போலவே, தமிழை யாதரிக்காது பழிக்கும் ஆரியப்பற்று மேலிட்ட சிலரையும் குறைகூறி யிருப்பார்களானால், அவர்கள் பேச்சு இன்னும் பயனுடையதா யிருக்குமென்று நாம் சொல்லவேண்டிய தில்லை. நிற்க.

சுருங்கச்சொல்லின், வேதம் வடமொழியிலிருப்பதாலும், விவகாரங்களனைத்தும் தமிழிலிருப்பதாலும், வடமொழியும் தென்மொழியும் ஒன்றையொன்று விட்டு விலகிநிற்க முடியவே முடியாது. ஆகவே, ஆரியத்தையும் தமிழையும் எவரும் அநாதரவு செய்தல் கூடாது. இவ்விரு மொழியும் நமக்கு இன்றியமையாதன. இவ்விரண்டும் நமக்கு இரண்டு கண்களாகும். இரண்டு கண்களும் எப்படி ஒரு பொருளையே காட்டுமோ அப்படி இவ்விரு மொழியும் நமக்கு ஒரு பொருளையே காட்டுகின்றன. ஆதலின், தீங்கு விளைக்கும் இப்பிரிவுக் கேதுவாகிய சிறிய எண்ணங்களையெல்லாம் ஒழித்து, நம் தேயத்தவர்கள், தமிழையும் ஆரியத்தையும் பொன்னேபோற் போற்றி ஒற்றுமைப்பட்டு வாழத் திருவருள்புரியுமாறு எல்லாம்வல்ல இறைவனை யிறைஞ்சுகின்றேம்.

பத்திராதிபன்.

கோட்டமாண்டு.

இற்றைக்கு நாலாயிரத்து இருநூறு யாண்டுகட்கு முன்னர்த் தோன்றினவனும், வானத்து விமானமூர்ந்த சோழன்வழியில் வந்தவனுமாகிய உருவப்பஃறேர்ச் சேட்சென்னியின் மகனுவான் கரிகாற்பெருவளத்தானுகிய திருமாவளவன் மிக்க பராக்கிரமமுடைய பேரரசன்

என்பது சங்கநூல்கள் ஆராய்ச்சிசெய்வார்களுக்கும், கல்வெட்டு ஆராய்ச்சி செய்வார்களுக்கும் நன்றாக விளங்கும். அவ் வரசன் தமிழ்நாடுகளின் பெரும்பிரிவாகிய சேர பாண்டி மண்டலங்களைச் செயித்துத் தன் கீழ்ப் படுத்தியதோடு அமையாது, இமயவெற்பின் வடபாங்கர் உள்ள சீனம், இருஷிகம் முதலிய தேயங்களையும், மேற்பாங்கரும் கீழ்ப்பாங்கரும் உள்ள இலாடம், யவனம், யுகந்திரம், கடாரம், காம்போசம் முதலிய தேயங்களையும் செயித்துத் தன் கீழ்ப்படுத்தியவன் என்க. அப் பெருமை வாய்ந்த பேரரசனது வரலாற்றைச் சிலப்பதிகாரம், பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை, அகநானூறு, புறநானூறு, மணிமேகலை, திரையன்பாட்டு, பழைய காஞ்சிப்புராணம் முதலிய பன்னூல்களினால் நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம். அக் கரிகாலன், தண்டகனால் ஆளப்பட்டுக் காடாய்க்கிடந்த காஞ்சிமண்டலத்தைக் காட்டை யழித்து நாடாக்கி, இருபத்துநான்கு கோட்டங்களை வகுத்து, ஒவ்வோர் கோட்டங்கட்கும் ஒவ்வோர் நகரம் ஏற்படுத்தி, தானே அக் காஞ்சியில் பதினாறு யாண்டுகள் ஆண்டு, பின்னர்த் தன் தாயனாகிய இளங்கோவை யாளச்செய்வித்தவன்.

அக் கரிகாலன் இருபத்துநான்கு கோட்டங்களை ஏற்படுத்தியநாள் தொடக்கி, கோட்டமாண்டு அவனால் வழங்குவதாயிற்று. அதனை, "மூவெண் கோட்ட முறைபடப் பகுத்து — மூவெண் வேளிரை முதல் வாய் நிறுவிச்—சோதில் கோட்டமாண்டினைத் தோற்றுவித்—தேதின் மன்னரியாவரும் பாவக் — கிள்ளி யிளங்கோத் தாங்கல் கடனென — வுள்ளி யிரீஇய வுரவோன்" என்னுந் தொண்டைமான் கதையைக் கூறுந் திரையன் பாட்டாலும், காஞ்சிபுரத்திற்கு மேற்குப் புறத்ததாகிய படுவூர்க் கோட்டத்துப் பழைய கோயிலாகிய திருக்கரபுரத்துக் கல்வெட்டினாலும் அறியலாம். கரிகாலன்காலந்தொடங்கி, இளங்கோ தொடு கழற்கிள்ளி முதலாயினர் ஆண்டபிறகு, தொண்டைமான் இளந்திரையன்முதல் படைக்கலக்கொட்டில் காட்டிய தொண்டைமான் ஈறாகப் பல தொண்டைமான்களின்காலம் வரையிலும் இக் கோட்டமாண்டே வழங்கிவந்ததாகத் தோற்றுகின்றது. பின்னும் பல்லவர்கள் ஆண்ட காலங்களில்கூடக் கோட்டமாண்டு வழங்கிவந்ததாகத் தெரிகின்றது. உ000 யாண்டுகளில் ஆட்சிசெய்த தெள்ளாறெறிந்த நந்திப்போத்தரையன் காலம்முதல் கம்பவன்மன், காமக்கன், மத்தி முதலிய அரசர்கள் காலத்தும், கச்சியைச் சயங்கொண்ட சோழன், கங்கை கொண்ட சோழன், முதல் இராச ராசன், சுந்தர சோழன் முதலிய சோழவர்கள் காலம்முதலாக, முரசூர் நாட்டு அரசர்களாகிய கம்பணவுடையார் கச்சியை ஆண்ட காலம்வரை அரச வாண்டுகளே வழங்குவதாயின. கடைசிக்

குலோத்துங்கன், இராச ராசன் முதலியோர்கள் காலத்துச் சகவாண்டும் வழங்கிவந்தது.

இதுகாறும் நாம் குறித்தவற்றால் இற்றைக்கு சக௬௮-ம் யாண்டுகள்முதல் தொண்டைமான்கள், பல்லவர்கள் சிலர் வரையும் கோட்டமாண்டு வழங்கிவந்ததாகத் தெரிகின்றது. முதன்முதல் கரிகாலச்சோழனால் காடுகெடுத்து நாடாக்கிக் கோட்டம் தாபித்தபோழ்து ஏற்பட்ட கோட்டமாண்டை நம் தொண்டைமண்டல வாசிகள் நீக்கி, வேறு நாட்டதாகிய சகவாண்டு முதலியவைகளை நானூறு, ஐந்நூறு ஆண்டுகட்கு முற்பட்ட கல்வெட்டுகளுள்ளேயே வழங்கிவந்தனர்கள் என்க. அம்மாதிரி வழங்கிவந்ததற்குக் காரணம், அவ்வக் காலங்களுள் இந் நாட்டை யாளவந்த அரசர்களின் கட்டாயத்தினாலுண்டான வழக்கங்களேயாகும். இம்மாதிரியே பாஷை, நடை, வழக்க வொழுக்கம், நூல்கள் யாவும் வேற்று நாடுகளினின்று நம் நாட்டிற் குடிபுக்கது.

திரு. சுப்பிரமணிய தேசிகர்,
சிலாசாசன பரிசோதகர், காஞ்சீபுரம்.

சற்புத்திரன் சஞ்சலம்.

ஓர் சோகக் கதை.

(வெண்டாமரை ௬, இதழ் ௭, 141-ம் பக்கத் தொடர்ச்சி.)

அத்தியாயம் 9.

கதாநாயகனுரை.

அக் கடிதத்தில் அடங்கிய விஷயமாவது :—

"ஸ்ரீ சரஸ்வதி சகாயம்.

நமஸ்காரம். நீங்கள் விடுத்த அன்பார்ந்த புத்திமதியும் அதற் கடையாளமான மோதிரமும் பத்திரமாயிருக்கின்றன. அதன்பிரகாரம் இத்தனைநாள் பொறுமையாகத்தானிருந்தேன். ஆனால், என்னால் சகிக்கக்கூடவில்லை. என் வீணையே போய்விட்டது. பைத்தியங் கொண்டவளைப்போலிருக்கின்றேன். இனி என்னாற் பொறுக்கமுடியாது. நான் குறிப்பிட்ட இடத்திற்குப் போகத்தான் வேண்டும். ஆகையால், தயைகூர்ந்து அதன் விவரத்தைத் தெரிவியுங்கள். தாமதம்

வேண்டா. பெரிய சுகிர்தத்தைக் கட்டிக்கொள்ளுவீர்கள். வழக்கம் போல் மாடத்தைப் பார்த்துவருகின்றேன். நான் ஏமாந்துவிடாமல் தயை செய்வீர்களாக.

சாவித்திரி.''

நேயர்களே! இக் கடிதத்தைப்பற்றியும், என்னைப்பற்றியும், சாவித்திரியைப்பற்றியும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஆனால், ஒரு விஷயம் முன்னமே கூற மறந்துவிட்டேன். அதையுந் தெரிந்து கொண்டு என்னவேனும் எண்ணிக்கொள்ளுங்கள். நான் நாலைந்து வருஷங்களாகப் பொன் மோதிரமொன்று அணிந்திருந்தேன். என் தந்தை பெயர், என் பெயர் இவற்றின் முதலெழுத்துக்களாகிய ந, ஜ என்ற அட்சரங்கள் ஒன்றின்மேலொன்று அழகாக அமைக்கப்பெற்ற முகப்புள்ளது. அந்த மோதிரத்தைச் சாவித்திரி நன்றாய் அறிவள். அந்த அழகிய மோதிரம் மாயமாய் என் கையிலிருந்து காணாமற்போய்விட்டது. எப்பொழுது? முன் காட்டிய கடிதம் தோன்றியதற்குச் சுமார் ஒரு மாதத்திற்கு முன்புதான். அது காணாமற்போனதுகூட என் அம்மாள் சொல்லத்தான் எனக்குத் தெரியும். திடீரென ஒரு நாள் "என்ன ஜனகம்! உன் மோதிரத்தை எங்கே காணோம்" என்றாள். கையைப் பார்த்தேன். விரலில் மோதிரமில்லை. எங்கெங்கேயோ தேடிப்பார்த்தோம். அகப்படவில்லை. அன்றைக்கு எழெட்டுத் தினங்களுக்கு முன்பு நான் கடலில் நீராடச் சென்றிருந்தேன். ஆகையால் அந்த ஆழிதான் என் அழகிய ஆழியை அபகரித்துக்கொண்டதென ஒருவாறு நிச்சயித்தோம். ஆனால், கடல்நீராடி மீண்ட பின்னரும் மோதிரம் விரலிற் கிடந்ததென எனக்குள் ஒரு மயங்கிய நினைவு இருந்தது. எது எப்படியிருந்தாலும் மோதிரம் மறைந்தது மறைந்ததுதானே.

என் அம்மாள் கடிதத்தை வாசித்தாள். சாவித்திரியின் எழுத்து அவளுக்குத் தெரியும். கடிதத்தை உற்றுற்றுப்பார்த்தாள். திரும்பத் திரும்ப வாசித்தாள். அது சாவித்திரி தன் சொந்தக் கையால் எழுதிய கடிதமே எனக் கண்டாள். அவள் நெஞ்சம் எப்படி எரிந்ததோ! "அடி காந்திமதி! உன் அண்ணன் செய்திருக்கும் வேலையைப் பார்த்தாயா!" என்று அலறி அழுதேங்கினாள். காந்திமதி வந்தாள். கடிதத்தையும் பார்த்தாள். என் அம்மாள் நெஞ்சில் எரிகிற நெருப்புக்கு நெய் வார்க்க மற்றொரு புண்ணியவதியும் தோன்றிவிட்டாள். அவள்தான் எங்கள் வீட்டுக்கு மூன்றாவது வீட்டுப் பரிபூரணத்தம்மாள்.

"ஐயோ! கேட்டீர்களா அம்மா செய்தி! ஐயோ அம்மா! இவன் இப்படிச் செய்வானென்று யார் நினைப்பார்கள்! ஐயோ! கலிகால

மென்றால் கலிகாலந்தான். ஐயோ! இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா என்றிருந்தாளே. என்ன துணிவம்மா! ஐயோ என்ன அநியாயமம்மா! ஐயோ! ஐயோ! —" என்று ஓர்விதமான இராகத்தோடு மூக்குமேல் கைவைத்தும், கைகளை விரித்தும், கண்களைச் சுழற்றியும் 'ஐயோ' பல்லவி பாடினாள் பரிபூரணத்தம்மாள்.

"என்ன அம்மா! என்ன! சங்கதியைச் சொல்லுங்கள்" என்றாள் என் தங்கை.

"சாவித்திரி யிருக்கிறாளல்லவா?" என்றாள் பரிபூரணம்.

"ம்ம்ம்? யார்?" என்றாள் காந்திமதி.

"சாவித்திரி, சாவித்திரி, உங்கள் சாவித்திரிதான். திருப்பதித் தாலிகட்டித் தடங்குலைந்த சாவித்திரி."

"ஆமாம் அவளுக்கென்ன?"

"என்னவென்றா கேட்கிறாய்! வீட்டைவிட்டு ஓடிப்போய் விட்டாள் நேற்றிராத்திரி."

"ஹாங்!" என்று மலைத்தாள் காந்திமதி. அதே நேரத்தில், "நேற்று இராத்திரியா! ஜனகமும் நேற்றிராத்திரி ரெயிலில்தானே போனான். ஆமாமம்மா, கலி அநியாயமாய் முற்றிவிட்டது. ஜனகனா! சாவித்திரியா! ஆ! தெய்வமே! இவர்களும் இப்படிச் செய்வார்களா! ஜனகம்! இதற்குத்தானா உன்னை இவ்வளவு காலம் இவ்வளவு பிரியமாக, இவ்வளவு அருமையாக வளர்த்தேன். மோதிரத்தை அவளுக்குக் கொடுத்துவிட்டு ஒன்றும் அறியாதவன்போல் என்முன் நடித்தாயே. துரைகள் துரைசானிகள்போல் மோதிரம் மாற்றிக்கொண்டீர்களோ! இத்தனைநாள் இவ்வூரில் உனக்கு ஒரு வேலையும் கிடைக்கவில்லை யென்றும், நாகபுரத்தில்தான் உனக்கு வேலை யமர்ந்தது என்றும் நீ சொன்னது பாசாங்குதானா! ஐயோ! நான் உன் தகப்பனாரை யிழந்து செல்வமிழந்து எல்லாமிழந்து சீர்குலைந்தேன். ஆனால், நீ என் சற்புத்திரன், உலகில் ஒருவரும் அடையாத அவ்வளவு உத்தமமான என் சற்புத்திரன், இந்தச் சற்புத்திரன்தான் என் நிறைந்த செல்வம் என்று மகிழ்ந்திருந்தேனே. ஐயோ மகனே! நீயா சற்புத்திரன்! சாந்தமும் சற்குணமும் அவதாரஞ்செய்ததுபோல் வெளிக்குத் தோற்றினாயே. என் வயிற்றில் இப்படித் தீயைக் கொட்டுவாயென்று கனவிற்கூட நினைத்தேனா! அட பாவீ! இருந்திருந்து கைம்பெண் பாவத்தையா கொட்டிக்கொண்டாய்! கலியாணமாகாத வேறு எந்தப் பெண்ணாயிருந்தாலும் ஒருமாதிரி ஆறிவிடுவேன். ஐயோ! நினைக்க நினைக்க நெஞ்சு குமுறுகிறதே.

இதற்குத்தானா நமது கௌரவமான வமிசத்தில் நீ உதித்தாய்!—" என்றவாறு பிதற்றிக்கொண்டு குப்குப்பெனக் கண்ணீர்சிந்தி அங்கலாய்த்தனள் என் அம்மாள். காந்திமதியோ "சும்மா இரு அம்மா! சும்மாவிரு. எல்லாம் தீர விசாரிப்போம். பொறு பொறு." என்று தன் அம்மாளைத் தேற்றிக்கொண்டே தானும் கண்ணீர் சிந்திக்கொண்டிருந்தாள். சாவித்திரி எழுதின அந்தப் பொல்லாத கடிதம் கீழே கிடந்தது. பரிபூரணத்தம்மாள் அதைக் கையில் எடுத்துப் பார்க்கலாயினள். "இங்கே கொடுங்கள் அதை" என்று காந்திமதி சீறி அதைப்பற்றிப் பிடுங்கப்போனாள். வெறிகொண்டவளைப்போலிருந்த என் அம்மாள், "இது என்ன மதியடி காந்திமதி! பார்த்தால் பார்க்கட்டுமே. எப்படியும் எல்லாம் பட்டப்பகலாய் விடும். துர்நாற்றத்தை எவ்வளவு மூடிப் பொதிந்துவைத்தாலும் அது வெளிப்படாமலிருக்குமா?" என்று என் தங்கையைத் தடுத்துவிட்டாள். பரிபூரணத்தம்மாளும் படித்து முடித்துவிட்டாள். மீண்டும் கடிதம் கீழே கிடந்தது.

"ஐயோ! என்ன துணிவம்மா பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு! நாமெல்லாங்கூடத்தான் படித்திருக்கிறோம். பெற்ற மாதாவுக்கு, அல்லது பிதாவுக்கு, அல்லது சகோதரனுக்கு யோக க்ஷேமங்களைப்பற்றி ஒரு எழுத்து எழுதுவதற்குக்கூட இந்தக் கை கூசி நடுங்குகிறது. இந்த மாதிரி எழுதியிருக்கிறாளே. மோதிரம் பத்திரமாய் இருக்கிறதாம். வெறிகொண்டவளாயிருக்கிறாளாம். அவளால் பொறுக்க முடியாதாம். எங்கேயோ போகத்தான்வேண்டுமாம். என்னத்தைப் பொறுக்கமுடியவில்லையோ! சித்திராங்கி! எனம்மா! வழக்கம்போல் மாடத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று எழுதியிருக்கிறாளே, அதுஎன்ன அருத்தம்?" என்று பரிபூரணம் என் தாய்முகம் பார்த்தாள்.

"அது என்ன பாழாய்ப்போன மாடமோ! என்ன தரித்திர வழக்கமோ!" என்ற உத்தாரத்துடன் ஏங்கிக் கோவென அழுதாள் என் அம்மாள்.

"நீங்கள் எனம்மா அழுகிறீர்கள்! சற்புத்திரனென்றால் அவர்தான் சற்புத்திரன். அவர் என்ன செய்வார் பாவம்! அவரை நொந்துகொள்ளாதேயுங்கள். அக்கிரமங்களுக்கெல்லாம் பெண்தான் இராணி. ஊசி நிறுத்தித் தவஞ்செய்த பெரிய ஞானி விசுவாமித்திரரையே ஊர்வசி மயக்கிவிட்டாள். ஒரு கபடமுமறியாத உங்கள் பிள்ளை என்ன செய்வார்! எல்லாம் அந்த நீலிப்பெண் செய்தவேலை. ஆனால், அவளைப் பற்றியும் அதிகமாய்க் குறைகூறக் கூடாது. அவள் தாயார் அப்படி

அவளை வளர்த்துவிட்டாள். பர்த்தாவைத் தின்ற பாதகிக்குப் படிப்பென்ன பாட்டென்ன சங்கீதமென்ன வீணையென்ன! தாலியற்றவளுக்குத் தையலென்ன பின்னலென்ன சித்திரமென்ன! கொண்ட புருஷனைக் குறுணி நாளில் குமுக்கென்று விழுங்கினவளுக்குக் குங்குமப் பொட்டென்ன மஞ்சளென்ன குலுக்கென்ன மினுக்கென்ன!" என்றாள் பரிபூரணம்.

"இல்லையம்மா. அவள் மஞ்சளைத் தொடவேமாட்டாளே. இல்லாததை ஏன் சொல்லவேண்டும்" என்றாள் காந்திமதி.

"மஞ்சள் பூசிக்கொள்ளமாட்டாளோ! ஓ! எனக்குத் தெரியாதம்மா! ஆனால் மஞ்சள் ஏன் பூசிக்கொள்ளமாட்டாள் தெரியுமா? புருஷனுக்கு மரியாதை வைத்தென்றா நினைக்கிறாய்! இல்லை யில்லை யில்லை யில்லை யில்லை. மஞ்சள் மினுக்கு கர்நாடக மினுக்கு என்று விட்டுவிட்டாள். அதற்குப் பதிலாக, புது மினுக்கு, நாகரிக மினுக்குக்கு ஒத்த ஒரு தளுக்கு மாவு இருக்கிறதே, ஒரு சுண்ணாம்புத்தூள், அதைப் பூசிக்கொள்வாள்போலும்" என்று பரிபூரணம் பேதைக் காந்திமதி வாக்கை அடக்கிவிட்டு, சற்றுநேரத்தில் விடைபெற்றுக்கொண்டு வெளிச் சென்றாள்.

சாவித்திரி வீட்டைவிட்டகன்ற செய்தியைப்பற்றி முன்னமே ஊர்முழுதும் பேச்சு. ஆனால் ஏன் போனாள், எப்படிப் போனாள், எங்கே போனாள் என்ற விஷயந் தெரியாது. அதை ஊகிக்கப் பலர் கடுஞ் சிரமப் பட்டுக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது, ஊசி நிறுத்தித் தவஞ்செய்த விசுவாமித்திரரை ஊர்வசி மயக்கின புராணத்தை அறிந்து சொன்னது போல், பரிபூரணத்தம்மாள் தான் ஆண்டாளம்மாள் வீட்டுக்குச் சென்று அறிந்த அருமையான இரகசியங்களைத் தன் புத்தி நுட்பத்தினாலும், வாக்குச் சாதுரியத்தினாலும் அலங்கரித்து, இவ் விஷய சம்பந்தமான உண்மையறிய ஆத்திரங்கொண்டு அவதிப்படுகிறவர்கள் ஐயங்களை யெல்லாம் பரிபூரணமாக நிவர்த்தித்து, ஜனகராஜன், சாவித்திரியை இழுத்துக்கொண்டு ஓடிய உண்மையைப் பூரணமாக்கிவிட்டாள்.

ஜீவரத்தினம் வீட்டுக்கு வந்தான். சகல சங்கதிகளும் அறிந்தான். "ஆஹா! அவளாகத்தானிருக்கவேண்டும்; அவளாகத்தானிருக்கவேண்டும்" என்று துள்ளித் தன் மீசையை முறுக்கினான். "எவள்? எவள்? என்ன விஷயம்?" என்று கேட்டாள் காந்திமதி. "நேற்று அவரை அனுப்ப ரெயிலுக்குப் போயிருந்தேனல்லவா? அப்போது அவரிருந்த வண்டிக்குப் பக்கத்து வண்டியில் அவரிருந்த ஜன்னலுக்குப் பக்கத்து ஜன்னற்புறத்தில் அதி பால்யமான பெண்ணொருத்தி தன் புடைவையால்

தலையில் முக்காடிட்டுக்கொண்டு வெகு கம்பீரமாய் உட்கார்ந்திருந்தாள். பதினெட்டு இருபது வயது இருக்கலாம். வேசியோ அல்லது என்ன வேணும் நாடகக்கூட்டத்தைச் சேர்ந்தவளோ என்று நினைத்தேன். ஆனால், அவள் முக்காடுதான் ஆச்சரியமாயிருந்தது. சற்றுநேரம் அவளையே உற்றுப் பார்த்தேன். உடனே எழுந்து எதிர் ஜன்னலுக்குப் போய்விட்டாள்" என்றான் என் அருமை மைத்துனன்.

இந்தப் புதிய சமாசாரம் என் அம்மாள் அகத்திற்கு எவ்வளவு குளிர்ச்சியையும் அமைதியையும் அளித்திருக்கும்! அன்று முழுதும் அவள் உணவு உட்கொள்ளவில்லை. ஆகையால், காந்திமதியும் உபவாசமிருந்தாள். இரண்டு குழந்தைகளுக்குக்கூடச் சரியாகக் கவனிப்பாரின்றிச் சரியான உணவுகிடையாது. ஜீவரத்தினம் மாத்திரம் வழக்கம்போல் சுகமாக உண்டு சுகமாக இருந்தான்.

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

தமிழ் மருத்துவம்.

மூன்று சங்கக்காலத்து மருத்துவநூல்கள் கிடைப்பது அருமையினும் அருமையே! கடைச்சங்கக்காலத்து இரும்பிடர்த்தலையார், மருத்துவன் நல்லச்சுதனார், மருத்துவன் தாமோதரனார், திருமூலர் முதலாயினவர்களே தமிழ் மருத்துவர்களென்று சங்கநூல்களால் விளங்குகின்றது. அவர்கள் காலத்தவர்களில் ஒருவராகிய திருமூலர் எழுதிய மருத்துவநூல் மாத்திரம் காணப்படுகின்றது. அதுவும், அவர் நூலெனப்பட்ட திருமந்திரமும் பலவழிகளாலும் ஒத்திருக்கின்றமையினால் அவரால் பாடப்பட்டதென்றே ஐயமறக்கொள்ளலாம். அகத்தியரால் அகத்தியத்துக் கூறப்பட்டதும், பிற்காலத்து மருத்துவத்தை மாத்திரம் வேறாக எடுத்து ஆளப்பெற்றதுமாகிய அகத்தியர் மருத்துவ சூத்திரங்கள் இப்போழ்து யாங்குங் கிடைக்காது மறைந்து இறந்தன. இப்போது அகத்தியர் நூல் என்று பல மருத்துவநூல்கள் உள்ளன. அவைகள் அகத்தியர் மருத்துவ சூத்திரங்களைத் துணையாகக்கொண்டும் ஆரியநூல்களின் மருத்துவங்களை மொழிபெயர்த்தும் பிற்காலத்தார் ஒருவரால் செய்யப்பட்டனவென்றே நன்றாகப் புலப்படுகின்றன. மேற்சொல்லியவாறே பதினெண்சித்தர் நூல்களிலும் பிற்காலத்தார் புனைந்தன பலவிளங்கும்.

இம்மாதிரியே ஆரியத்திலும் பல காணலாம். அவை பம்பாயி லச்சிடப் பட்டிருக்கின்ற பதினெண்புராணங்களைப் பார்த்தவர்கட்குத் தெரியும். அமண் முதலிய பல் சமயங்களின் கூட்டுறவுபேதத்தால் நம் நாடுகளில் பற்பலகாலங்களில் உள்ளார் பலர் தங்கள் கருத்துக்கு வேறுபட்ட நூல்களைக் காணின், அவைகள் உள்ள பாகங்களை எடுத்துவிடுதலும் வேறு புதியன புனைதலும் வழக்காய்விட்டன. ஆயினும், அறிவுடையார்கள் ஆராயின், அவைகள் வெண்சுதைதீற்றிய சுவரிலிட்ட கருமையேபோல் விளங்கும் என்க. இவைகளை எல்லாம் நம் நாட்டின் தமிழ் மருத்துவர்கள் ஆராயின் நன்மையாகும் என்க. இப்போது அகப்படுகின்ற பதினெண்சித்தர் முதலியோர் மருத்துவநூல்களிலும் மேற்படி சித்தர்களால் பாடப்பெற்ற உண்மை நூல்களைக் கண்டு ஆராயின் நோயின்குண முதலிய அறியலாகும். நிற்க.

தமிழ் நூல்களில் நோய்கள் ௪௪௪௮ ஆகப் பகுக்கப்பட்டுள்ளன. அவைகளின் குணங்கள் நாடிகளினாலும் எண்வகை ஆராய்ச்சிகளாலும் அறியப்படும். நோய்களை நாடி ஒன்றானே அறிந்துசொல்வது கூடாமை என்று சிலர் சொல்லுவர். அஃது தமிழ் நாடிநூல்களைக் கண்டறியார் கொள்கைபோலும். இரத்தாசயத்தின் துடிப்பே நாடி என்பது உண்மையே. அவ் விரத்தம் அவரவர் உணவுகளாலும் நோய்களினாலும் பேதப்பட்டு மாறிமாறி நடக்கும் என்க. அஃது கடற்கரையில் நின்று பார்ப்போமாயின், அலைகள் பெருமை சிறுமையாக மாறிமாறி முன்னும் பின்னும் பெரிது சிறிதாகத் தோற்றுகின்ற மாதிரியைக்கொண்டு ஊகிக்கலாம். இதயத்திலிருந்து இரத்தம் நுரையீரலுக்குள் சென்று தூய்மையாகி நெஞ்சின் இடது அறையில்வந்து பெருநாடி வழியாகச் சென்று உடம்பு முழுவதும் பரவும். அம்மாதிரி பரவும்போழ்து பற்பல விதங்களாகச் செல்லும் இரத்தத்தின் நடை, நோய்ப் பேதங்களினாலும் உணவின் பேதங்களினாலும் வேறுபடும் என்பது பல்லோர்க்கு நன்றாய் விளங்கலாம். அஃது அலைகள் காற்றின் தன்மை முதலியவற்றால் பேதப் படுவதேபோலென்க. மேலும், நோய்களை நாடிகளேயன்றி, கண், குரல், உடம்பு, ஊறு, நாக்கு, மலம், மூத்திர முதலியவற்றின் வேற்றுமைகளினாலும், வளி, பித்து, ஐயம் என்கின்ற பாகுபாட்டையும் கண்டு, நோயின் இயல்புகளை நுணுகிச் சீராக ஆய்ந்தவர்கள் பண்டைக்காலத்துத் தமிழப் பதினெண்சித்தர்கள் முதலியோரேயாம். பின்னும் சில நோய்கள் நரம்புகளினாலும், சில நோய்கள் கண், குரல், உடம்பு முதலிய வாராய்ச்சிகளினாலும் நுனித்து ஆராய்தற்பாலன. வேறு சில நோய்கட்கு நாடி முதலிய தெரியாவென்றும், அவைகளை அந் நோய்கட்குக் கூறும் மருத்

துவக்குணங்களினுலேயே அறிவதற்கு அருமையாகுமென்றும் மருத்துவ நூல்கள் கூறும். உதாரணமாக, மதுமேகம் உள்ளுக்குள்ளேயே யிருந்து, திடீரென்று இராசபிளவை முதலிய கட்டிகள் கண்டு அவற்றின் குணங்களை வெளிக்காட்டும் என்க. மேற்சொல்லிய மதுமேகம், மிகு தீம் பண்ட முண்போர், மனக்கலக்க முண்டோர், நூலாராய்ச்சி கொண்டோர் முதலியோர்க்கும், இந்திரியநஷ்டம் உள்ளோர்க்கும் கட்டாயம் உண்டாகும் என்று உண்மையாய்ச் சொல்லலாம். மேலும், இன்னின்ன நோயுள்ளவர்கட்கு நாடி விளங்காதென்பதை அடியில்வரும் செய்யுளாற் காண்க.

குறையாத பெண்போக நெடுநோ யாளர்
    குதிரைமத கரியேறி நடந்தோ ரூர்ந்தோர்
நிறைவாக வுண்டெழுந்தோர் லகரி கொண்டோர்
    நீர்ப்பாடு நீரிழிவு குறைநோ யுற்றோர்
முறையாக வீக்கமுள்ளோ ரத்தி கைகால்
    முசித்திளைத்தோர் பயமுற்றோர் விடம ணைந்தோர்
அறையாம லோட்டமுற்றோர் கிலேசங் கொண்டோர்
    அறப்பசித்தோர் தாதுவகுப் பறமாட் டாதே. (௧)

மாட்டாங்கி யானபெண்கள் கெர்ப்பத் தோர்க்கும்
    மாதவிடா யானோர்க்கும் பெரும்பா டோர்க்கும்
சேட்டாசை யதிகவிசா ரத்தி னோர்க்குங் [கும்
    தேய்த்தெண்ணெ முழுகினர்க்குஞ் சினங்கொண் டோர்க்
வாட்டாசைக் கன்னியர்மேல் பராக்கா னோர்க்கும்
    வயசாக விளைத்தோர்க்கு மதங்கொண் டோர்க்கும்
மோட்டாத்து மாக்களுக்குந் தாது பார்க்க
    முறையாக வருநாடி வகுப்ப ருதே. (௨)

வகுப்பாகக் கைம்முறிந்தோர் சோகை கொண்டோர்
    மாண்டபிணந் தனைத்தொட்டோர் வாந்தி விக்கல்
தொகுப்பாக வேயெடுத்தோர் விரத முற்றோர்
    சோனைமழை தனினனைந்தோர் சுரசங் கீதம்
பகுப்பாக வேபடித்தோர் கள்ரி சுற்றிப்
    பலநாட்டி யங்கள்மிக வாடி யெய்த்தோர்
மிகுப்பாகச் சுவாசமதை யடக்கி னோர்க்கும்
    விரைவான நாடியது விலங்குந் தானே. (௩)

இப் பாடல்களிற் குறிப்பிட்டவர்களுக்கெல்லாம் நாடி நன்றாக விளங்காதென்க.

(இன்னும் வரும்)

திரு. சுப்பிரமணிய தேசிகர்,
சிலாசாசன பரிசோதகர், காஞ்சீபுரம்.

பெண் கல்வி.

அறிவும் அடக்கமும் நிரம்பிய ஆடவன் ஒருவன் தனக்கு எக்காலத்தினும் பெருந் துணையாக நிற்பது கல்வி ஒன்றேயென்று கருதுகின்றானென்பது உண்மையே. ஆயினும் உலக அனுபவமின்றிக் கல்வி ஒன்றே சிறந்த சாதனமாகக்கொள்வது அக் கல்வி உடையானுக்கு இடுக்கண் விளைவிக்கும். எங்ஙனமெனின், கற்றலின் பின் ஒழுகுவது மனிதனுக்கு அசாத்தியமாயிருத்தலினாலும், கல்வியையே ஒரு பயன்படுபொருளாகக் கருதுதலினாலும், அகங்காரம் மனத்திடை நிகழ்ந்தவழி இவனுக்குக் கல்வியே மீளாத் துன்பம் விளைவிக்கின்றது. ஆகவே கல்வியுடன் யுக்தியும் அனுபவமும் மிகவும் இன்றியமையாதன.

கல்வி, யுக்தி, அனுபவம் இவை மூன்றும் ஒருவன் பெற்றிருப்பினும் பிறருக்குப் பயன்படாது தானே அவை காரணமாக உண்டாகும் நலங்களை அனுபவிப்பானாயின் அவன் மனிதப் பிறவி எடுத்ததன் பயனை அடையமாட்டான். தன் சுகத்தைக் கருதாது பிறருக்குப் பயன்படுவானாயின் தன்னை யறியாதே தனக்கு இன்பம் நல்கும். இதனை உய்த்துணர்ந்த மூதறிவாளருள் சிலரும் தங்கட்குத் தெய்வீகத்தால் கிடைத்திருக்கும் மனையாட்டிகள் தங்களுடைய மனோபாவத்தைக்காட்டிலும் மேலானவர்களாகக் காணப்படுவார்களாயின் அவர்களை இகழ்ந்து, மடநலார்க்குரிய அச்சம், நாணம், மடமை, பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களும் பொருந்தியில்லையென்று குறைகூறுகின்றார்கள். அவர்கள் மாட்டுள்ள குறையென்று நினைத்தற்கிலது. இவர்களுடைய அறிவை விசாலப்படுத்தாததினால் நிகழ்ந்த குறையென்று விசனிக்கின்றோம். முகத்தைக் காட்டும் கண்ணாடியென்றாலும் கண்ணாடிக்குக் கண்ணாடி வித்தியாசமுண்டன்றோ.

நிற்க, பற்பல நாடுகளின் பொற்புறு செல்வியும், அந் நாடுகளில் புகழுதற்குரிய பல நலங்களும், ஆடவன் செய்யும் கருமமும், ஆடவர்

பணியும் ஒழுக்கமும், இவையனைத்தையும் தேச யாத்திரை செய்வானொருவன் அறிந்தும் இன்னும் எவ்வெவ்விதமான சீர்திருத்தங்கள் பிறரிடத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியதோ அவற்றைக் கற்று அனுசரித்தும் வரவேண்டியது கற்றறிவாளர்கள் கடமை. இதனைக் கருதியன்றோ ஆங்கில அறிவாளிகளில் பலர் தங்கள் சிறுவர் சிறுமிகள் கலாசாலையில் பயின்று கல்வித் தேர்ச்சியடைந்ததும் சிலகாலம் தேச யாத்திரை செய்யும்படி அனுப்புகின்றார்கள்.

அவ்விதம் பலருடன் கூடிப் பழகிவருதலினால் நம்முடைய துராசாரங்களை நாம் விலக்கிக்கொள்வதற்குச் சாதனமாகும். எவ்விதம் எவருடன் பழகினும், தாதி மனம் நீர்க்குடத்தேதான் என்றபடி, தாம் எடுத்த கருமத்தில் ஆழ்ந்த கருத்துடையவராகவும்,

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவர் கூற்றுக்கிணங்க ஒழுக்கத்தைக் கைவிடாதவராகவும், நற் சீர்திருத்தங்களை அனுசரித்தும் வரவேண்டியது அறிவுடையோர்க் கியல்பு.

இஃதன்றி, ஆங்கிலமும் தமிழும் பயின்ற நம்மவர்களில் சிலர், மேனாட்டுச் சீர்திருத்தங்களை அனுசரிப்பது முறையென்று கருதி, குடும்பம் நடாத்து முறைதவறி, அவர்கள் அறிவுக்கும் கற்ற கல்விக்கும் போதிய ஒழுக்கம் இல்லையென்று பிறர் தூற்றும்படி நடந்துகொள்கின்றார்கள். அவ்விதம் மேனாட்டுச் சீர்திருத்தங்களை அனுசரிப்பதாக நினைப்பதில் பெண் கல்வி ஒன்று.

இவ்வாறு நினைப்பதினும் மேலான தவறு வேறொன்றில்லை. ஏனெனில், நம்மவர்களில் சிலர் "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பென் செய்யும்" என்று கருத நேரிடினும், உற்று நோக்குங்கால், காளிதாசன் சாகுந்தலம் என்னும் நாடகத்தை எழுதியகாலத்து, சகுந்தலை துஷ்யந்தனுக்குக் கடிதம் எழுதுவது, அக்காலத்தில் பெண்கள் தங்கள் காதலை விளக்கிப் புருஷர்களுக்குக் கடிதம் எழுதுவது வழக்கம் என்பதைக் காண்பிக்கின்றதன்றோ? ஆகவே பெண் கல்வி மேனாட்டுச் சீர்திருத்தம் என்று கருதுவது மிகத் தவறு.

ஆனால் பெண்கள் படிப்பது தவறெனத் தற்காலத்தில் சிலர் நினைக்க நேரிடுகிறதெனின், அநேகம் பெண்கள் பாதிரிகளினால் ஏற்படுத்தப்பட்ட கல்லூரிகளிற் பயின்று தங்கள் தெய்வங்களை மறந்துவிடுதலினாலும், அன்றியும் அவர்கள் கலாசாலையினின்றும் நன்மை தீமை

இன்னதென நன்கு பகுத்தறியக்கூடா இளம்பருவத்தே நிறுத்திவிடப் படுதலினாலும், சுவரின்மேலிருக்கும் பூனை எப்பக்கத்தில் பாயுமென அறியோமோ அஃதேபோல், இளந்தளிரன்ன இன்னுயிர்ச் செல்விகள் நன்மையோ தீமையோ செய்யத் தலைப்படுகின்றனர்கள். இஃது அவர்களை வழிப்படுத்திக்கொண்டுவரும் ஆடவர் பெண்கள் குற்றமாகும். தக்க கலாசாலையில் புகுவித்தும், நல்லொழுக்கமும் ஈசுவரபக்தியும் உண்டாகக் கூடிய நூல்களைப் புகட்டியும், குடும்ப பாரத்தைத் தாங்கி வருபவர்கள் பெண்களாகையினால் பொறுமையுண்டாகும்படி செய்தும், குழந்தைகளைப் பாதுகாத்துவருவது அவர்கள் கடமையாகையினாலே அவர்களுக்குச் சுகாதார முதலிய நூல்களைப் போதித்தும் வருவார்களாயின், ஒவ்வொரு பெண்ணும் மங்கைத் திலகமாம் மங்கையர்க் கரசியெனப் புகழ்பெறும் என்பதற் கையமில்லை.

அன்றி, பெண்களுக்கு உயர்தரக் கல்வி கொடுப்பதனால் தவறு ஒன்றும் இல்லையெனினும், மனோ வியாபாரத்திற்குத் தகுந்த வண்ணம் அவர்களுக்குத் தேக வலிவு இன்மையினாலே, உயர்தரக் கல்வி சிலாக்கியமெனச் சொல்ல இடமில்லை. ஆனால் அவர்கள் சுகாதாரம், மருத்துவம் முதலியவைகளில் பயின்றிருப்பது குடும்பம் நடாத்து முறைக்கு மிகவும் இன்றியமையாததென மிகவும் துணிவாகச் சொல்லலாம்.

இது நிற்க, அழகே திரண்டனைய உருவங்கொண்ட ஆநந்தப் பூங்கொடியாளாயினும் மனம், நற்கல்வி, நற்பழக்கம் முதலியவைகளால் சுத்தப்படாமலிருக்குமாயின், மனிதனுக்கு அவ் வழகு என்ன பயனைத் தரும்! பெண்ணின் வயத்ததாகிய அழகு நாளுக்குநாள் குறையுமாகையினால் அவள் மனத்திடை கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலியவைகளால் அன்பு நிகழுமாறும், அவ்வன்பு பிறைச் சந்திரன்போன்று வளருமாறும், ஸ்திரீபுமான்கள் தினம் தினம் தாங்கள் பழகிவரும் தன்மையாலும் அன்பே சிவமென மதிக்கும் தன்மை எக்காலத்து இருவர் மாட்டு உண்டாகி இருவர்பால் தேகத்தினிடம் உண்டாகிய காம விச்சை நீங்கி மனம் பற்றி உண்டாகும் அன்பு அபிவிருத்தியாகுமோ அக்காலமே இறைவன் எடுத்துக்கொண்ட முயற்சி பயனுடைத்தென் றறியவேண்டும்.

ஆகவே, இவ்வன்பு முதிர்ச்சியொன்றே இறைவன் இன்னருளைப் பெறுதற்குக் காதலன் காதலி இருவருக்கும் அநுகுணமாயிருத்தலினால், அதற் குபகாரமாகவுள்ள இயல் இசை நாடகங்களை ஆடவரைப்போல் பெண்களும் வாசித்து இன்புற்றிருத்தல் வேண்டும்.

சி. பொ. இரத்தினசபாபதி முதலியார்.

தருணீமணி.

7. தருணீமணியின் விசாரணை:

(வெண்டாமரை ௪, இதழ் ௫-௬, 119-ம் பக்கத் தொடர்ச்சி.)

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே!

அகதிக்கு அநாதிநாதனன்றி யாரே துணை! அவ்வநாதிநாதனும் என் வாழ்நாளறிந்து அதனைப் பாழ்நாளாக்கக் கருதினன்போலும்! — ஓ கடவுளே! உன்னையன்றி ஓரணுவு மசையாதே. நிரபராதியாகிய நான் இப்பழி சுமந்து உபாதிப்படுவதும் உன் சம்மதமோ? அது நீதியாமோ? அல்லது உண்மையாகத் தெய்வத்திற்குக் கண்ணென்ப தில்லையோ? — சங்கரா! மன்னிப்பாய்! யானோ நின்பெருமை சாற்ற? — ஆனால் சங்கரா! நின்மனம் கல்லினுங் கடிது! நீ விஷமலோசனன்! மலர்வாளிவிட்ட மதனனை யெரித்து உன்னைச் சாடிய மற்றோர்க்கு முத்தியளித்தவன்! நம்பு மடியாருக்குக் காலைத்தூக்கிக் காட்டுபவன் — அடடா! என்ன விபரீதமாகக் குளறிவிட்டேன் — சங்கரா! நான் பிதற்றியதை மன்னிப்பாய்! —

"நான்படும் பாடு சிவனே யுலகர் நவிலும்பஞ்சு
தான்படு மோசொல்லத் தான்படு மோவெண்ணத் தான்படுமோ
கான்படு கண்ணியின் மாபடு மாறே கலங்கிநின்றே
னேன்படுகின்றனை யென்றிரங் காயென்னி லென்செய் வேனே!"

எனப் புலம்பிக் கழித்தனள் தருணீமணி அன்றிரவு.

பொழுதுபுலர்ந்தது. சோமவாரம். இன்றையதினமே தருணீமணியின் விசாரணை. ஊரெங்கும் இவ் வதிசயக் கொலைச் செய்தி பரவியது. அரசனும் தானே நேரிலிருந்து இவ் வழக்கை விசாரிப்பதாகத் தெரிவித்தான்.

இராச சபையில் திரள்திரளாக ஜனங்கள் வந்து கூடினர். வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த யாவரும் தனியாக வேற்பட்டிருந்த ஆசனத்திலமர்ந்தனர். பிரபுக்களும், நகர் ஜனங்களும் அரசனது ஆசனத்தை

நோக்கி அமர்ந்தனர். சில நிமிஷங்களில் மங்கள வாழ்த்தொலி "வல்லவப் பிரபோ! வாழ்க!" என அந்தரத்தெழுந்தது. அரசனும் தனதாசனத் தமர்ந்தனன். தருணீமணியும் சில காவலர் சூழக் கண்ணீரால் நனைந்து பொலிவிழந்த வதனத்துடன் வந்து தோன்றினள். அப்பொழுது கண்ணீர் விடாதவர் சிலரே!

பின்னர் விசாரணை யாரம்பித்தது.

சுகுமாரனும் சபையி லமர்ந்திருந்தான். தருணீமணியிடம் விசுவாசம் பாராட்டிய தலையாரி சின்னசாமியைப்பற்றி யாதொரு சங்கதியும் தெரியவில்லை. — தருணீமணி தண்டனை யடையவேண்டியவளே!

நியாயசபையில் தருணீமணி தான் குற்றவாளி யல்லவென்று வாதித்தாள். தனக்குத் தெரிந்தவரை கொலையின் விவரத்தையும் எடுத்துக் கூறினள். பிணத்தைப் பரிசோதித்த வைத்தியனும், சோமதத்தன் வீட்டு வேலைக்காரனும், தமக்குத் தெரிந்தவற்றை வெளியிட்டனர். இவற்றிலிருந்து தருணீமணி விஷம் வாங்கிவந்ததும், அதற்கு முன்னால் பத்மினி தருணியை அவ் வீட்டிலிருந்து நீக்கிவிடப் பிரயத்தனித்த செய்தியும் வெளிவந்தன. ஆக, தருணீமணி தன்னை வேலையினின்றும் நீக்க முயன்ற எஜமானியைக் கொலைசெய்யக் கருதியது சுபாவமே யென்றும் தருணீமணி குற்றவாளி என்பதிற் சந்தேகமேயில்லையென்றும் எண்ணப்பட்டது.

வல்லவராயன் தீர்மானஞ் சொல்லப்புகுந்தான். இதற்குள் சபையில் ஓர் பேரரவம் நிகழ்ந்தது. தலையாரி ஒருவன் இருபுறமும் ஜனங்களை விலக்கிக்கொண்டு ஓடிவந்து சுகுமாரனின் கரத்திற் சில காகிதச் சுருள்களைக் கொடுத்தான். இருவர் சாக்ஷிகள் உட்காரும் ஆசனத் தமர்ந்தனர்.

சுகுமாரனும் சந்தோஷத்துடன் அவைகளைப் பார்வையிட்டு, "மன்னர்மன்ன! எதிர்பாராத வண்ணமாக இவ் வழக்குத் திரும்பும்போலிருக்கிறது — என் சாக்ஷிகளை விசாரித்தாற் போதுமானது —" என்றான்.

நிச்சப்தம்:

"தெய்வநாயகத் தேவா!"

நகர்க் கொலையாளி சபையில் வந்து தோன்றினன்.

தெய் - தேவன் : — "ராஜ ப்ரபோ! நான் இந்நகர்க் கொலையாளி! இப் பெண் என் மருமகள். பத்மினியம்மாள் கொலை நேர்ந்தவன்று சாயந்தரம் இவள் என்னுடன் இருந்தாள். அவள் செய்திருக்க

முடியாது. நான், இப்பொழுதுதான், வேற்றூர் போனவன் திரும்பி வந்தேன்.''

"சரி!— கூறு! உனக்கென்ன தெரியும்?''

"ராஜாதிராஜ! கொலைக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் பெண் என் உறவினள். அவள் சில வாரங்களுக்கு முன் சோமதத்தர் வீட்டில் வேலைக் கமர்ந்தாள். அவளைப் பார்க்காமல் என்னால் ஒரு கணமும் இருக்க முடிகிறதில்லை. அவளைப் பிரதி ஆதிவாரமும் பார்த்துப் போகலாம் என்று சோமதத்தர் எனக் கனுமதி கொடுத்துள்ளார். எனினும் நான் வேலையற்றிருக்கும்போது சோமதத்தர் வீட்டுத் தோட்டத்திலுள்ள அடர்ந்த மல்லிகைப் புதரினுள் ஒளித்திருந்து அவளைப் பார்த்து மகிழ்வேன். இது தருணிக்குத் தெரியாது — நிற்க, கொலை நேர்ந்த அன்று நான் அங்கிருந்தேன். தருணி எங்கேயோ சென்றனள். நான் அவளுக்காக அங்கேயே காத்திருந்தேன். அப்புறம் சோமதத்தரும் பத்மினியம்மாளும் சில கிண்ணங்களில் ஏதோ பானகத்துடன் அங்கு வந்தார்கள். சில நிமிஷங்களுக் கப்புறம் சோமதத்தர் பத்மினியை நோக்கி "அக்கா! கொஞ்சம் சர்க்கரை கொண்டுவா! எனக்கு நா கசக்கிறது!'' என்றார். பத்மினியம்மாள் உள்ளே சென்றதும் சோமதத்தர் ஓர் குப்பியை எடுத்துப் பானகத்தில் கவிழ்த்தார். பின்பு அவ்வம்மணி வந்ததும் தனக்குப் பானகம் வேண்டியதில்லை என்று சொல்லிப் போய்விட்டார். பானகம் கெட்டுவிடும் என்று சொல்லி அவ்வம்மணி அதைச் சாப்பிட்டார்கள் — சாப்பிட்டதும் "தம்பி! என்னைக் கொன்றுவிட்டாயடா'' என்று கீழே விழுந்தார்கள். நான் பயந்து ஓடிவிட்டேன் —''

பின்னர்ச் சபையில் நேர்ந்த குழப்பத்தை நம் வாசகரே யோசித்துக்கொள்ளக்கூடும். "சோமதத்தரைப் பிடி!''

"மஹாப்ரபோ! நான் இதோ சிறைப்பிடித்துவைத்திருக்கிறேன்!'' என்றான் சின்னசாமியும்.

R. வாசுதேவ சர்மா.

காவேரி தீரவாசம்.

குலங்களாலோங்கும் நான்கு ஜாதியார்களுக்கும், தரும பரிபாலனத்திற்குச் சரீரம் முக்கிய சாதனமாகின்றது. தமிழர் தருமத்தை அறமென்பர். அறத்தையும் இன்பத்தையும் உதவப் புறத்தே நடுவாய்

நின்று பயன்படுகின்றது பொருள். உடலோ அகச்சாதனமாய் ஆன்மாவுடன் கூடி ஆதி சாதனமாகின்றது. மனிதர் ஆஸ்திகர்களாய் நித்திய நைமித்திக கன்மங்களையும் அவைகளுள் முக்கியமாகிய தேவபூஜையையும் தமக்கேய்ந்துள்ள ஜீவனோபாய வாயிலாக நிஷ்காமியமாச் செய்வாராகில் இல்லறம் முட்டின்றி முடியும். அது பலிக்கவே சற்சங்கமும், குருவருளும், ஞானநூற் கேள்வியும், ஆன்ம ஞானமும் பல ஜன்மப் பழக்கத்தால் திடம்பெற்றுத் துறவின் பயனும் முத்தியும் கைகூடும்.

இவ்வாறாயினும் முதற் சாதனமாம் சரீரம் நோயணுகாது திடம் பெற்றாலன்றி மற்றையவை கைகூடா. சுத்தமான நீரும், காற்றும், உணவும், சரீரம் நழுவுமளவும் உட்கொள்ளப் பெற்றவரிடம் மூத்திர ரோகம், அன்னத்துவேஷமடியாக நேரும் மலபந்தரோகம், விஷமச்சுரம் இவைகள் தலைநீட்டா. தரும புத்திரர் ராஜசூயயாகம் புரியத் தம்பிமார் நால்வரையும் திக்கு விஜயம் செய்துவர அனுப்பியபோது, தெற்குத் திக்கில் விஜயம் பெற்றுவரச் சகாதேவன் சென்றதை மகா பாரதத்துக் கூறும்போது, சோழன் நாட்டின் வளமும், காவேரியின் வளமும், பல விருக்ஷங்கள், ஒஷதிகள் முதலியவைகளின் சிறப்பும் கூறப்பட்டுள்ளன. காவேரி நீரில் ஒரு விசேஷ குணமுளது. அந்நீரின்மேற் படிந்து வீசுங் காற்றும், அந்நீர் பாய்ந்து விளைந்த நெல் முதலிய தானிய வகைகளும், காய்கனி இனங்களும் மேலே கூறிய நோய்களைத் தலைநீட்ட வழியின்றி அடித்தோட்டுவதோடு சத்துவகுணம் தலையெடுக்கும்படியும் செய்கிறது. சோணாட்டில் சற்றேறக்குறைய நூறுமைல் தூரத்தில் காவேரி நதியில் ஜலத்தின்கீழாக மணற்பரப்பு வாய்ந்துளது. அதன் மேலோடுவதால் காவேரி நீருக்கு இயற்கையாகவே ஓர் சுத்தி ஏற்படுவதினால் விசேஷமாகின்றது. இச் சுத்த நீர் பெரும் பயனளிப்பதால் காவேரி சோணாட்டிற்கே மிகு பயனளிப்பதாகின்றது. மைசூர்ப் போக்கில் வேளாண்மை வகையிற் காவேரி பயனளிப்பினும் சுத்த நிலைபெற்று மிகு பயனளிப்பதில்லை. காட்டிலும் மலைகளிலும் பாறைகள்மேலும் மடுக்களிலும் மேட்டிலும் பள்ளத்திலும் வடக்கினின்று தெற்குமுகமாய் ஓடுமிடங்களில் நீர் சுத்தமின்றியும் நல்ல பூசாரமின்றியும் வேளாண்மைக்கு முரியதாகாமலும் கிடக்கின்றது. காவேரி குடகுமலையிலிருந்து கடலிற் கலக்கும் காவேரிபட்டணமட்டும் 400 மைல் தூரம் செல்கின்றது.

சீகாழி, மாயவரம், இடைமருதூர், கும்பகோணம், ஐயாறு, திருவானைக்கா, திரிசிரபுரம், ஸ்ரீரங்கம் முதலிய பல தலங்களும் மூர்த்திகளும் தீர்த்தங்களும் சோணாட்டில் மலிந்திருக்கின்றன. இத்தல புராணங்களில் இத்தல வாசஞ்செய்ய நேர்ந்த எல்லோரும் முத்தி பலனடைவார்க

ளென்று கூறப்பட்டுள்ளது. சாமானிய ஜனங்களுக்குள் நம்பிக்கை யுண்டாக்கப் பௌராணிகர்கள் ஒருண்மையை மிகுத்துக் கூறுவது வழக்கம். முதலிற் சரீரசுத்தியும் சத்துவகுணமு முண்டாகிப் பிறகு முறை முறையாய்ப் பல ஜன்மங்களில் சாது சங்கமும் ஆன்ம ஞானமும் குரு வருளு முண்டாகிப் பிறவி நீங்கி, நித்திய சுகமாம் பேரின்ப நிலயம் பெறுவதுவே மனிதர்களின் நெறியாம். தலவாசமொன்றே முத்தியளிக்காது. புதுவையில் நீரும், பூசாரமும், கடற் காற்றும் நலந்தருவனவாய் வாய்த்திருப்பதோடு சமீபத்தில் பெண்ணையாறும் சுத்த நீருள்ளதாய் ஓடுவதாலன்றோ சென்னை முதலிய நகரவாசிகள் தேக சவுக்கியங் கருதி அடிக்கடி வந்து வசிக்கின்றனர். சோணாட்டில் காவேரியில் நீர் மிகுதியுள்ள நாளில் புறநாட்டார் 2, 3 மாதகாலம் காவேரி தீரத்தில் வசிப்பார்களாயின் இங்குக் காட்டிய நோய்கள் சாரா. தலயாத்திரையும் வாசமும் கைகூடும். ஊஞ்சலூர், கொடுமுடி, மோகனூர் இவ்விடங்கள் சோணாட்டுக்கு மேற்கே யிருக்கினும் காவேரி தீரமாதலால் வாச யோக்கியத்திற்குரிய இடங்களாகின்றன. நோயணுகாவழி கூறுதல் வைத்தியக் குறிப்பாமாதலால் நாம் நேரிற் றங்கி யுணர்ந்த வுண்மையை யிங்குக் கூறினோம்.

தி. வேங்கடராம ஐயங்கார்,
தமிழ்ப் பண்டிதர், புதுவை.

பெண்கள் பெருமை.

அன்பு, சாந்தம், பொறுமை, இன்சொல், தூய்மை, பேதமை, (கபடற்றதன்மை) ஆகிய நலங்கள் பெண்ணுக்கென்றே விசேஷமாக மானிட உற்பத்திகாலந் தொடங்கி அமைந்துள்ளன. இவ் வுன்னத லக்ஷணங்கள் யாரிடத்தில் அமைந்திருக்கின்றனவோ அன்னோரிடத்தில் அழகும் ஒரு அற்புதமான வசீகர சக்தியும் அவசியம் நிலவத்தான் வேண்டும். ஆகையால் பெண்களுக்கென்றே இயற்கையில் விசேஷமாக அமைந்த முற்கூறிய அன்பு சாந்தம் முதலிய குணங்களின் காரியமாக அழகும் வசீகரமும் அவர்களுக்கு இயற்கையான விசேஷ லக்ஷணங்களாயமைந்தன. அன்பு, அழகு முதலிய பலவித நலங்கள் பெண்பாலுக்கென்றே சிறப்பாக அமைந்துள்ளதால், அவர்களுக்கு, தோகை (மயில் போல் சாயலுடையவள்) மெல்லியல் (மென்மையான தன்மையுடையவள்) பேதை (கபடற்றவள்) பைங்கிளி, தேன்மொழி என்ற தமிழ்ச் சிறப்புப் பெயர்களும், ஆங்கிலத்தில் அழகியபால் (The Fair sex) சாத்விக

பால் (The gentle sex) என்ற பெயர்களும் மிகமிகப் பழையகாலத்திலிருந்தே வழங்கப்பட்டு வந்திருக்கின்றன.

போதிய அறிவு விசாலமற்ற சமூகத்தில், அஃதாவது சாந்தம் அன்பு முதலிய குணங்களின் சிறப்பையும் உன்னதத்தையும் உண்மையாக, சரியாக, உணர்ந்துகொள்ளக்கூடியவளவு அறிவு விசாலிக்காத சமூகத்தில், படபடத்த தன்மையுடையாரும், இலௌகிக வாழ்க்கைக்கு இன்றியமையாத உண்ணல், உடுத்தல் ஆகிய காரியங்களுக்குச் சாதனங்களைச் சேகரிப்பவர்களுமே முதன்மையடைகிறார்கள். அவ்விதமாகத்தான் ஆண்பாலார் பலவிதத்திலும் முதன்மையடைந்து உயர்ந்த பகுதியாராகக் கருதப்பட்டு, தையலர் ஜாதி தாழ்த்தப்பெற்றுப் பல நூற்றாண்டுகளாக மானிட சமூகம் நிகழ்ந்துவந்திருக்கிறது. அதிலும் தற்காலத்துத் தமிழ்நாட்டுப் பெண்கள் அடைந்துள்ள இழிந்த நிலைமையைப்போல் வேறெந்த நாகரிக நாடும் அடைந்ததில்லையென்று மிகத் துணிகரமாகக் கூறலாம். இவ்வாறு இருப்பினும், ஆடவர்கள் தன்மைகளெல்லாம் பெண்பாலினால் அமைக்கப்பட்டு, பெண்பால், சமூகம் நிகழ்கின்ற தன்மைக்குக் காரணமாகியே யிருந்திருக்கின்றாள். இவ் விஷயத்தை இக் கலைமகளில் முன்பு ஒருமுறை சற்று விரிவாக விவரித்திருக்கிறேன்.

ஆனால் பழைய அநுபவங்களினாலும் புதிய புதிய பயிற்சிகளினாலும் நாளுக்குநாள் மானிட அறிவு விசாலித்து விசாலித்துவரும் இக் காலத்தில் ஒரு கிளர்ச்சி நாகரிக உலகு முழுவதும் உதித்திருக்கிறது. அஃதாவது :—

பெண்பாலும் மானிடப் பிறவியே. ஆகையால் மானிடப் பிறவிக்குள்ள உரிமைகள் அவளுக்குண்டு. பெண்ணாகப் பிறந்த ஒரே காரணத்திற்காகப் பெண்பாலைத் தாழ்மையாகக் கருதுவதும் பேசுவதும் நடத்துவதும் அவளுக்கென்று பிரத்தியேகமான கட்டுப்பாடுகளையும் நிர்ப்பந்தங்களையும் நியமித்தலும் அநியாயம். புருஷர் ஞானத்தில் உயர்ந்தவர்கள் பெண்கள் தாழ்ந்தவர்கள் என்பது அறிவீனம். தாயின் வயிற்றிலிருந்து பிறக்கும்பொழுது புருஷர்கள் மாத்திரம் பண்டிதர்களாகவும் பெண்கள் மாத்திரம் பாமரர்களாகவும் பிறக்கவில்லை. எல்லோரும் ஒரேவித அறியாமையிலேதான் ஜனிக்கிறார்கள். அறிவிலே மேற்பட்டது உயர்ந்த ஜாதி. அறிவிலே குறைந்தது தாழ்ந்த ஜாதி. பிறப்புப் பேதத்தை அறவே மனத்தைவிட்டொழித்து, அறிவின் ஆழம் புத்தி நுட்பம் திறமை முதலிய பலவித நலங்களை நோக்கி, பெண், ஆண் என்ற இருபாலா

ருட்பட்ட மானிட சமூகத்தில் ஏற்றத் தாழ்வைக் கருதுவதுதான் தகுதி. ஆண், பெண் ஆகிய இருபாலாருடைய சமத்துவத்தைப் பாராட்டலும், இருவருடைய அறிவை வளரச்செய்தலுந்தான் ஒழுங்கு.

இக்கிளர்ச்சியைச்சார்ந்த கொள்கைகளைப்பற்றி, கலைமகள் சென்ற மார்ச்சு மீ தத்துச் சஞ்சிகையில், "பெண்கள் விடுதலை" என்ற வியாசத்தில் ஓர் சகோதரி அழகாக விவரித்திருக்கிறார்கள். அதை நேயர்கள் மீண்டும் ஒருமுறை வாசிப்பார்களாக.

இத்தகைய புதிய தெய்விகக் கிளர்ச்சி தமிழ்நாட்டிலும் தோன்றி விட்டது. வெறுந் துன்பத்திற்கென்றே பிறந்த பகுதியார் யாரென்றால் நமது தமிழ்நாட்டுப் பெண்களைத்தான் கூறலாம். அவ்வித நிலைமையிலுள்ள பெண்கள் நிறைந்த தமிழ்நாட்டில், நமது அரசாங்கத்தார் அளித்த கல்வியால் அறிவுக்கண் விசாலமாகத் திறக்கப்பெற்ற தமிழ்நாட்டில், முற்கூறிய கிளர்ச்சி புகுந்தது ஆச்சரியமன்று. ஆனால் இன்னும் அது குழந்தைப் பருவத்திலிருக்கிறதே என்பதுதான் வியக்கத்தக்கது, விசனிக்கவும் தக்கது. தற்காலம் குழந்தையாயிருந்தபோதிலும் இக்கிளர்ச்சி, பழைய கொள்கைகள், ஆசாரங்கள் முதலியவைகளில் குருட்டுப்பற்று, குறுகிய அறிவு நோக்கம் முதலிய பிணிகளையெல்லாம் நீங்கி, அதி துரிதமாகவும் அழகாகவும் அற்புதமாகவும் வளர்ந்து, அழியாத யௌவனமுடைய யுவதியாக வாழ்ந்து தமிழ்நாட்டைச் சுவர்க்கமயமாக்க, சாரதா தேவி அருள்செய்வாளாக.

மங்களம்.

பிரகிருதி சாஸ்திரம்.

நான்காம் பாடம்.

(வெண்டாமரை ௪, இதழ் எ, 143-ம் பக்கத் தொடர்ச்சி.)

வஸ்துக்களின் வேறு சில லக்ஷணங்கள்:— முதற்பாடத்தில், வஸ்துக்களின் முக்கிய லக்ஷணங்களில் மூன்றைப்பற்றிச் சொன்னோம். இப்பொழுது வேறு சில லக்ஷணங்களைப்பற்றிக் கூறுவது ஆவசிகமாயிருக்கிறதாகையால், அவ்வாறு புரியத் தொடங்குவோமாக.

பகுபடுதன்மை:—வஸ்துக்கள் பற்பலபாகங்கள் அல்லது துண்டுகளாகப் பகுக்கப்படும் இயல்புடையனவாயிருக்கின்றன. இந்த லக்ஷணத்தைத்தான் பகுபடுதன்மை என்கின்றோம். வஸ்துக்கள் மிக நுணுக்கமான துண்டுகளாகப் பகுபடுதன்மைக்குப் பல உதாரணங்கள் காட்ட

லாம். ஒரு சிட்டிகை நல்ல கஸ்தூரி ஒரு அறை முழுவதும் பல வருஷங்களாக நறுமணங் கமழச்செய்வதை அநுபவத்திலறியலாம். அதற்குக் காரணம், அக் கஸ்தூரியிலிருந்து பிரிவுபட்ட துகள் அல்லது மிகச் சிறிய பொடிகள் அவ்வறை முழுவதும் நிரம்பியிருத்தலே. இத்துகள்கள் அறையிலிருந்து வெளிச் செல்லச் செல்ல, கஸ்தூரியிலிருந்து புதிய துகள்கள் பரவிக்கொண்டேயிருக்கின்றன. இப்படிப் பலவருஷங்களாக, சதா, துகள்கள் கஸ்தூரியிலிருந்து வெளிச்சென்றால் எவ்வளவு லக்ஷக் கணக்கான துகள்கள் வெளிச்சென்றிருக்கவேண்டும்! ஆனால், எவ்வளவு நுட்பமான தராசைக்கொண்டு கஸ்தூரியை முதன்முதலும், பல வருஷங்களுக்குப் பிறகும் நிறுத்துப்பார்த்தால், அதன் எடையில் இலவலேசமும் வித்தியாசம் தோன்றாது. எனினும், உண்மையில் பல துகள் பிரிவுபட்டுப்போயிருப்பதால் வித்தியாசம் இருக்கத்தான்வேண்டும். அவ் வித்தியாசம் எவ்வளவு நுட்பமான தராசினாலும் அறியக்கூடாதவாறு அவ்வளவு மிகச் சொற்பமாயிருக்கிறது. அவ்வளவு மிகச் சொற்பமான கஸ்தூரிபாகம், பல வருஷங்களாகப் பல லக்ஷக்கணக்கான துகள்களாகப் பிரிவுபட, அத்துகள்கள் அறை முழுவதும் வாசனை வீசினவென்றால், ஒவ்வொரு துகளும் எவ்வளவு நுட்பமாயிருக்கவேண்டும். மற்றொரு உதாரணம்.

ஒரு நெல்லரிசியளவு †தூமிர வர்ணக் கட்டி இரண்டுகாலன் தண்ணீரில் கரைய, அத் தண்ணீர் முழுவதும் தூமிரநிறத்ததாகிறது. ஆகையால் அவ்வளவு சிறிய வர்ணக்கட்டி கோடி துகள்களுக்குக் குறையாமல் பகுபட்டிருக்கவேண்டுமென்று அறியப்பட்டிருக்கிறது.

வஸ்து எவ்வளவு நுட்பமான உருவமுள்ளதாயிருக்கலாமென்பதைக் குறித்து, கடைசியாக ஒரு வேடிக்கையான உதாரணம் சொல்லுகிறோம். இரத்தம் இருக்கிறதே அது என்னவென்றால், யாதொரு நிறமுமற்ற ஓர்வகைத் திரவ வஸ்துவில், சிவப்பான சிறுசிறு உண்டைகள் மிதக்கின்றன, இவையிரண்டுந்தான் இரத்தம். மானிட இரத்தத்திலுள்ள முற்கூறிய சிவப்பான ஒரு உண்டையின் குறுக்களவு என்னவென்றால், அது ஒரு அங்குலத்தின் மூவாயிரத்தைந்நூற்றில் ஒரு பாகமே. ஒரு ஊசிமுனையில் தொட்டுக் கீழேவிழாமல் தொங்கவிடக்கூடியவளவு துளி இரத்தத்தில், இவ்வகைச் சிவந்த உண்டைகள் சுமார்

---

† தூமிர வர்ணக்கட்டி :— அமெரிக்காவிலுள்ள ஓர் மரத்திற் படியும் பூச்சிகளின் சடலத்தைக்கொண்டு செய்யப்படும் ஓர் கருஞ் சிவப்புச் சாயம். இதற்கு ஆங்கிலத்தில் கார்மைன் (Carmine) என்று பெயர்.

பத்துலக்ஷ மிருக்கின்றன. இவ் வுண்டைகளைவிட அளவிற் சிறிய கிருமிகளிருக்கின்றனவென்று பூதக்கண்ணாடிப் பரீட்சைகளினால் தெரிகிறது. இந்தக் கிருமிகளுக்கு உணவு வேண்டுமே? ஆகையால் அவைகள் தங்களைவிடச் சிறு கிருமிகளைத் தின்னுகின்றன. இவ்வாறு கிருமிகளுக்கு உணவாகிற சிறு கிருமிகளின் நரம்புகளிலும் இரத்தம் ஓடுகிறதென்றால், அந்த இரத்தத்திலுள்ள சிவந்த உண்டைகளின் அளவு எவ்வளவு நுட்பம்! எவ்வளவு நுட்பம்!

ஆனால், வஸ்துக்கள் எவ்வளவுதான் பகுக்கப்படும்? அவற்றின் பகுபடுதன்மைக்கு எல்லையே யில்லையா? எவ்விதப் பரீக்ஷைகளினாலும், அவ்வாறு பகுபடுதன்மைக்கு ஒரு எல்லை நிருமிக்க முடியவில்லை யென்பது உண்மையே. எனினும் ரசாயன சாஸ்திர சம்பந்தமான சில விஷயங்களை முன்னிட்டு, வஸ்துக்களின் பகுபடுதன்மைக்கு ஒரு எல்லையிருக்கிறதென்றே கொள்ளவேண்டியதிருக்கிறது. அஃதாவது வஸ்துக்கள் இனிப் பகுக்கமுடியாத அதி நுட்பமான துகள்களால் ஆக்கப்பட்டிருக்கின்றன வென்பது கொள்கை. பகுபடாத இந்தத் துகள்களை பரமாணுவென்ற பெயரால்அழைப்போமாக. ஆனால் பகுபடாத பரமாணுக்களால் வஸ்துக்கள் ஆக்கப்பட்டிருப்பது, ரசாயன சாஸ்திர சம்பந்தமான சில நிகழ்ச்சிகளுக்குச் சரியான காரணஞ் சொல்லக்கூடிய ஒரு கொள்கையேயன்றி, எவ்விதப் பரீட்சைகளினாலும் எவ்விதப் பூதக்கண்ணாடிகளினாலும், பகுபடாத ஒரு பரமாணுவை ஒருவரும் பார்த்ததில்லை. முற்கூறிய ரசாயன சாஸ்திர சம்பந்தமான நிகழ்ச்சிகள் யாவை? அவைகளுக்கும், 'பரமாணு' கொள்கைக்கும் என்ன பொருத்தம்? என்று விளக்கப்புகின் மிக விரியும். இந்தப் பிரகிருதி சாஸ்திரத்தில் அவ் விரிவான விளக்கம் ஆவசிகமல்ல. ஆகையால் அதனை விடுத்து முக்கியமான மற்றொரு விஷயத்தைக் கூறத் தொடங்குவோம்.

(இன்னும் வரும்)

பாரதிபக்தன்.

குழந்தைகளை வளர்த்தல்.

(பெண்கல்வி.)

சிசுக்களைப் போஷிக்க இரண்டு வழிகளுண்டு. ஒன்று முலைப்பால் கொடுத்தல், இரண்டாவது புட்டிப்பால் கொடுத்தல். குழந்தைகளுக்கு இவைகளுள் மிகச் சிறந்தது முலைப்பால்தான். ஏனெனில், புதிதாய்ப் பிறந்த குழந்தையின் குடல் தாயின் பாலைத்தான் ஜீரணிக்கச்

சக்தியுள்ளது. முலைப்பால் குடித்து வளரும் குழந்தை புட்டியினின்று பால் குடித்து வளரும் குழந்தைகளைப்போல் நோய் நொடியால் பீடிக்கப் படாது. ஆகவே ஒவ்வொரு தாய்மாரும் கூடுமானவரையில் தம் குழந்தைக்குத் தாமே பால்கொடுக்க முயற்சிக்கவேண்டும்.

தாயின் அகால மரணத்தாலோ அல்லது தேக அசௌக்கியத்தாலோ தம் குழந்தைக்குப் பால்கொடுக்க முடியாமற்போனால், குழந்தைக்குப் பால்கொடுக்கக்கூடிய செவிலித்தாயைக் கொண்டாவது பால் கொடுக்கச் செய்யவேண்டும். அந்தச் செவிலித்தாய் சரீர சௌக்கிய முள்ளவளாய், திடகாத்திர சரீரியாய், அதிக வாதசரீர மில்லாதவளாய் இருக்கவேண்டும். க்ஷயரோகம், குஷ்டம் முதலிய தொற்று வியாதிகள் எதுவும் அத் தாய்மாரிடம் காணக்கூடாது. அத் தாய்மார்கள் 20 வயதிற்குமேல் 30 வயதிற்குள்ளும் பால் கொடுக்கப்போகிற குழந்தைக்குச் சரிசமான வயதுடைய குழந்தையைத் தாங்களும் உடைத்தானவர்களாயுமிருக்கவேண்டும். நிச்சயமான மனத்தையும் அவர்கள் பெற்றிருக்க வேண்டும். துராகிருதமான மனோவிகாரங்களுக்கு இடங்கொடாதவர்களா யிருக்கவேண்டும். இடங்கொடுத்தால் அவர்கள் கொடுக்கும் பால் பிரயோஜனப்படாமல் வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு, இழுப்பு முதலிய கொடிய நோய்களைக் குழந்தைக் குண்டாக்கிவிடும்.

குழந்தை பிறந்த பிறகு 2 மணிக் கொருமுறை அல்லது 4 மணிக் கொருமுறை தாய் முலைப்பால் பருகும்படி விடவேண்டும். முதலில் முலைக்காம்பைச் சர்க்கரைகலந்த தண்ணீரால் ஈரப்படுத்துவது நலம். குழந்தை பிறந்த இரண்டு நாளுக்குள் அரிசிக் கஞ்சியாவது இதர ஜீரணமாகாத ஆகாரத்தையாவது கொடுத்தல் மிகவும் கெடுதல். அந்த இரண்டு நாட்களிலும் தினமொன்றுக்கு நான்கு தடவைகளுக்குமேல் குழந்தையை 6 தடவைகள் வரையில் முலைப்பால் குடிக்கவிடலாம். முதல் ஐந்து வாரங்களிலும் பகற்காலத்தில் இரண்டுமணிக் கொருமுறை தவறாமலும், ஆறுவது வாரத்திலிருந்து 12-வது வாரம் முடிய $2\frac{1}{2}$ மணிக் கொருமுறையும், மூன்றாவது மாதத்திலிருந்து 9-வது மாதம் முடிய 8 மணிக் கொருமுறையும், 9-வது மாதத்திலிருந்து 12-வது மாதம் முடிய $3\frac{1}{2}$ மணிக் கொருமுறையும் சரியாய் முலைப்பால் கொடுத்துவரவேண்டும். இரவில், முதல் வாரத்தில் ஒருமுறை அல்லது இரண்டுமுறையும், பிறகு 5-வது மாதம் வரையில் இரவு 10 மணிக்கு ஒரே தடவையும், ஐந்தாவது மாதத்திற்குப் பிறகு, இரவு 10 மணிக்குமேல் காலை 6 மணி வரையில் ஒன்றும் கொடுக்காமலு மிருக்கவேண்டும்.

குழந்தைக்குச் சரியான காலங்களில் முலைப்பால் கொடுப்பதில் வெகு கருத்தாயிருக்கவேண்டும். குழந்தை அழுதபொழுதெல்லாம் பால் கொடுப்பதென்பது, குழந்தையின் ஜீரண சக்திக்குக் கெடுதலை யுண்டாக்குவதோடு கூட, வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு, அஜீரணம் முதலியனவும் உண்டாக்கும். குழந்தைக்குச் சரியான காலங்களில் ஆகாரங் கிடைத்திருந்தால் அது அழுததின் காரணம் தீாகத்தாலிருக்கும். அப்போது கொஞ்சம் சூடான தண்ணீர் கொடுத்தால் மறுமுறை பால்கொடுக்கும் வரையில் தாங்கும். 15 நிமிஷங்களுக்குமேல் ஒரு குழந்தைக்குப் பால் கொடுத்துக்கொண் டிருக்கக்கூடாது.

அங்கிய ஸ்திரீகளது பாலும் குழந்தைக்குக் கிட்டாதுபோனால் கைம்முறையில் குழந்தைக்கு ஆகாரம் கொடுத்துவரவேண்டும். ஸ்திரீகள் முலைப்பாலுக்கு இணையாக எந்த ஜந்துவின் பாலுமாகாது. ஆனால், இலகுவில் நமக்குக் கிடைக்கக்கூடிய ஜந்துவின் பால் பசுவின் பால் தான். பசுவின் பச்சைப் பால் குழந்தையின் ஜீரணத்திற்குத் தகுந்ததல்ல. ஸ்திரீகளது முலைப்பாலிலும் பசுவின் பாலிலும் கொழுப்பு சரிசமமாக இருந்தபோதிலும், மிசிர வகையில் பேதமுண்டு. பசுவின் பாலில் புஷ்டி கொடுக்கும் சத்து, நூற்றுக்கு $3\frac{1}{2}$ பங்கு, சர்க்கரை, நூற்றுக்கு $4\frac{1}{2}$ பங்கு. மேலும் அது புளிப்பாய் எதிர்க்களிக்கக் கூடியது. ஸ்திரீகள் முலைப்பாலோ காரமாய் எதிர்க்களிப்பது. பசுவின் பாலில் ஸ்திரீகள் முலைப்பாலிலிருப்பதைவிடப் பாலடைக்கட்டி அதிக விசேஷம். அது சிக்கிரத்தில் ஜீரணிக்கமுடியாத கெட்டித் தயிராய்விடும். ஸ்திரீகளின் பால் சேர்த்தியாயும் அதிசிக்கிரத்தில் ஜீரணிக்கக்கூடியதாயுமுள்ளது. பசுவின் பாலை ஸ்திரீகள் பாலுக்குச் சமதையாய் வெறும் தண்ணீர்விட்டாவது, ஜவ்வரிசித் தண்ணீருடன் கலந்தாவது நூற்றுக்கு $3\frac{1}{2}$ பங்கு வீதமிருந்து புஷ்டி கொடுக்கும் பதார்த்தத்தை $1\frac{1}{2}$ வீதம் குறைத்து விடலாம். இவ்விதம் நீர்கொண்டு பாலைச் சமப்படுத்தலால் அப்பால் ஜீரணிக்கத் தகுந்ததாய் விடுகிறதுமல்லாமல் அப் பாலின் இதர உபவஸ்துக்களும் சாந்தப்படுகின்றன. கொழுப்புக் குறைந்துள்ளதாயிருந்தால் நூற்றுக்கு 16 அல்லது 20 மடங்குள்ளதான ஆடையின் சேர்க்கையால் அது சரிப்பட்டுவிடும். குழந்தையின் ஜீரணத்திற்குச் சாதாரண சர்க்கரை அல்லது வெள்ளைச் சர்க்கரையைக் காட்டிலும் பாலிலுள்ள சர்க்கரையே மிக ஏற்றது.

முதலில் ஒரு பக்ஷத்திற்குக் கொடுக்கப்படும் பால், பாலும் தண்ணீரும் ஒன்றுக்கு மூன்றுயிருக்கலாம். பிறகு மூன்று மாதம் வரையில் ஒன்றுக்கு இரண்டாயும், பிறகு ஆறுமாதம் வரையில் ஒன்றுக்கு ஒன்று

யும், பிறகு 9-வது மாதம் வரையில் இரண்டுக்கு ஒன்றாயும் கலந்து கொடுக்கவேண்டும். முதல் மாதத்தில் குழந்தைக்கு வேளை ஒன்றுக்கு 1 அல்லது 1½ அவுன்ஸ் பாலும், இரண்டாவது மாதத்தில் 2 அல்லது 3 அவுன்ஸும், மூன்றாவது மாதத்தில் 3 அல்லது 4 அவுன்ஸும், 4, 5-வது மாதங்களில் 4 அல்லது 5 அவுன்ஸ் பாலும், 6-வது மாதத்தில் 5 அல்லது 6 அவுன்ஸும், 7 முதல் 9-வது மாதம் முடிய 6 அல்லது 7 அவுன்ஸுகளும், 9-வது மாதம் முதல் 12-வது மாதம் முடிய 8, 9 அவுன்ஸுகளும் கொடுத்துவரவேண்டும். பச்சைப் பாலே தேகத்திற்குப் புஷ்டியைத் தரத்தக்கதெனினும், சாதாரணமாகக் கிடைக்கும் பாலைக் குழந்தைக்குக் காய்ச்சாமல் கொடுக்கக்கூடாது. ஏனெனில், இப்பாலில் ஜீரண கருவியைக் கெடுக்கக்கூடிய அநேக கிருமிகளிருக்கின்றன.

அசுத்தமான புட்டியும் அழுக்கடைந்த ரப்பர் மூலைக்காம்பும் சரியாய்த் தயாரிக்கப்படாத ஆகாரம் எவ்வளவு கெடுதல் செய்யுமோ அவ்வளவு கெடுதலை யுண்டுபண்ணும். ஆகவே, பால் குடிக்கும் புட்டியை எவ்விதம் தேர்ந்தெடுக்கவேண்டுமென்றும் எப்படி அதைக் காப்பாற்றவேண்டுமென்றும் இங்கே குறிப்பிடுவது அநாவசியமானது. புட்டியானது படகுபோலும், மூலை ஒடுக்குகளில்லாமலும் இலகுவில் கழுவக்கூடியதாய்ப் பள்ளங்களுமில்லாமலு மிருக்கவேண்டும். குழந்தை பால் குடித்தவுடனே புட்டியிலுள்ள மிகுதிப் பாலைக் கீழே சுத்தமாய் வடித்துவிட்டு நன்றாய்ச் சோடாமாவு கலந்த நீரைக்கொண்டு கழுவிவிட வேண்டும்.

டாக்டர் ராஜன்.

இலக்கியப் பகுதி.

யசோதர காவியம்.

மூன்றாவது சருக்கம்.

(வெண்டாமரை ௪, இதழ் எ, 152-ம் பக்கத் தொடர்ச்சி.)

“இனி யசோதரனும், அவன் தாயாகிய சந்திரமதியும் தீவினைப் பயனால் விலங்குகதியிற் பிறந்தனர்; அவ் வரலாறு கூறுகின்றேன் கேட்பாய்” என்று அபயருசி, மாரிதத்த மன்னனை நோக்கி வழுத்தலானன் :—

அரசனாகிய யசோதரன் விந்தமென்னும் மலையில் ஓர் மயிலின் வயிற்றில் முட்டை வடிவங்கொண்டு வளர்ந்துவரு நாளில், வேடுவனொருவன் வேட்டைநாய்களோடுவந்து அம் மயிலைத் தன் அம்பால் எய்தனன். அதனால் மயிலின் முட்டை வெளிப்பட்டது. அதனை யெடுத்து அவன் அருகில் நின்ற வேட்டுவச்சி கையிற்கொடுத்து, "கோழிமுட்டைகளோடு இதனையும் வைத்து வளர்த்துவருக" எனக் கூறினன்.

இஃதிங்ஙனமாக, அரசன் தாயாகிய சந்திரமதி யென்பாள் முன்செய் வினையினால் உச்சயினி நகர்ப்புறத்துப் பறைச்சேரியில் நாயாகப் பிறந்து வளர்ந்தனள். அம் மயிலையும் அந் நாயையும் வளர்த்தவர்கள் அவற்றின் அழகைக் கண்டு, யசோமதி யரசனுக்கு அவற்றைக் காட்சிக்குரிய பொருளாகக் கொடுத்தார்கள். அவ்விரண்டும் அரசன் அரண்மனையிலேயே வளர்ந்துவந்தன.

மன்னனாகிய அழகிய மயிலானது, முன் தான் அரசனாயிருந்த காலத்து, தன்னைக் கண்டெழுந்து நிற்றற்குரியாரிடத்து இப்போது தானெழுந்து நிற்கும்படியாயிற்று. முன் தன்னைக்கண்டஞ்சுபவர்களிடத்து இப்போது தான் அஞ்சி நிற்கவேண்டியதாயிற்று.

அஞ்சி லோதியர் தாமடி தைவரப்
பஞ்சி மெல்லணை பாவிய பள்ளிமேற்
றுஞ்சு மன்னவன் மாமயிற் றோகையோ
டஞ்சி மெல்ல வசைந்தது பூமிமேல்.

மேகலை யணிந்த இடையினையுடைய அழகிய மகளிர் பொற்கலத்தில் பாலடிசில் ஊட்ட அமர்ந்து உண்ட அரசன், இப்போது மயிலாகி அரண்மனைக்கு வெளியிடத்தில் இரையவாவி யிருந்தயில் கின்றதே. சந்திரமதியாகிய நாயானது குப்பைமேட்டிற் சென்று, ஊரிலுள்ளார் உண்டபின் எடுத்தெறியும் எச்சிலுணவைத் தின்று அகழிநீரினருகாகவும் சாக்கடைநீரினருகாகவும் இருந்து வருந்தலாயிற்று.

நல்வ தத்தொ டறத்திற நண்ணலர்
கொல்வ தற்குள முன்செய் கொடுமையா
னெல்வ தற்கரு மாதுய ருற்றனர்
வெல்வ தற்கரி தால்வினை யின்பயன்.

ஓர் நாள் அரண்மனைக் கருகிலுள்ள அழகிய மண்டபத்தின்கண் மறைவாக இருந்து அமிர்தமதி யென்பாள் தனது காதற் கிழவனாகிய அட்டபங்கனோடு கூடிக் குலவியிருந்தனள். அப்போழ்து தற்செயலாக அம் மண்டபத்திற் புகுந்த யசோதரனாகிய மயில் அச் செயலைக் கண்

ணுற்றது. கண்டதும், அப்பிறப்பிலும் தன் மனைவியின் செய்கையை உணர்ந்து அதற்குப் பொறாது விரைந்து அட்டபங்கனிடம் சென்று அவன் கண்களை மூக்கினுற் குத்திக் களைந்துவிட்டது. அது கண்டு அமிர்தமதி கடுஞ்சினங்கொண்டு அம்மயிலின்மேற் கற்களை விட்டெறிந்து அதன் தலையை நொறுங்கச் செய்யவே, தத்தி மஞ்ஞை தரைப்பட வீழ்ந்ததே. அப்போது அரண்மனையில் வளர்ந்துகொண்டிருந்த சந்திரமதியாகிய நாயானது அதையறிந்து ஓடி அம் மயிலைத் தன் வாயினுற் கௌவிக்கொண்டு செல்ல, மயில் இறக்க, அதனைக் கொண்டுபோய் அரசன் முன் போட்டது. அது கண்ட யசோமதி யரசன் ஆராயாமல், "நாய்தான் இவ்வாறு மயிலைக் கடித்துக் கொன்றுவிட்டது" என்று நினைத்துக் கடுஞ் சினங்கொண்டு பலகையால் அந் நாயை யடித்துக் கொன்றுவிட்டனன்.

முன் அரசனுயிருந்து வினைவசத்தால் மயிலாகப் பிறந்து மடிந்த மயில், மறுபடியும் விந்தமலையின் காட்டில் ஒரு முள்ளம்பன்றியாகப் பிறந்தது. அரசனுல் கொல்லப்பட்ட நாய், முன் அரசியாயிருந்தகாலத்தில் செய்த தீவினையின் பயனுக நாயாகப் பிறந்து மாண்டதுமன்றி, பின்னரும் அந்த விந்தமலைக் காட்டில் ஒரு கரும்பாம்பாய்ப் பிறந்தது. அப் பாம்பு, ஓர் நாள் இரை யகப்படாமல் அலைந்துகொண்டிருந்த அப் பன்றிக்கு எதிர்ப்பட்டு அதற்கு இரையாயிற்று. பிறகு காட்டில் திரிந்துகொண்டிருந்த அப் பன்றியை ஓர் காடி கொன்று தின்றுவிட்டது. காடியால் மடிந்த அப் பன்றி, உச்சயினி நகர்க் கருகிலோடும் சிருப்பிரை என்னும் ஆற்றில், உலோகிதம் என்னும் பெயரிய மீனுகப் பிறந்தது. முன் பன்றிக் கிரையான கரும்பாம்பு அவ் வாற்றிலேயே முதலையாக வந்து தோன்றியது. அம் முதலை உலோகிதமென்னும் அம் மீனைப் பிடித்து விழுங்க முயன்றுகொண்டிருக்கையில், அரண்மனையிலிருந்து வந்து அவ் வாற்றில் நீராடின கூனி யென்பாளை அம் முதலை பிடித்து விழுங்கிவிட்டது. அச்செய்தி தெரிந்ததும் அரசன், அம் முதலையைப் பிடித்துக் கொன்றுவிடும்படி கட்டளையிட்டனன். உடனே வலைஞர்கள் வலைவீசி அதனைப் பிடித்து வருத்திக் கொன்றுவிட்டனர். இம் முதலை அந்நகர்ப் பறைச்சேரியிலே ஓர் பெட்டையாடாகப் பிறந்தது.

முதலையைப் பிடித்தற்கு வீசிய வலையில், உலோகிதம் என்னும் மீனும் அகப்பட்டதால், அதனை அரசனுக்குக் கொண்டுபோய்க் காட்டினர். அம் மீனினது விசித்திர வடிவத்தையும் அழகையும் கண்ட அந்தணரிற் சிலர், "இம்மீன் அரசர் செய்யும் சிராத்தத்திற்கு உரித்தானது" என்று கூறினர். அவ்வண்ணமே அரசனும் அதனைச் சிராத்தம்

செய்தனன். அப்போது அந்தணர், யசோமதி யரசன் இவ்வுலகத்தில் இன்புற்று வாழ்க; விண்ணுலகில் யசோதர மன்னனும் சிறக்கவென்றனர் தீவினை யாளரே.

நின்ற கண்டத்து நீளுயிர் போயது
சென்ற தன்பிறப் போர்ந்து தெளிந்தது
நின்று நின்று துறக்கத் திருத்துதல்
நன்று நன்றென நைந்திறந் திட்டதே.

இவ்வாறு சிராத்தத்திற்கென்று கொன்று தின்ற உலோகிதமென்னும் மீன், முன் சொன்ன ஆட்டின் வயிற்றில் ஓர் ஆட்டுக்கடாவாகப் பிறந்தது. ஓர் நாள் அக்கடா, தன் தாயோடு புணர்ச்சி செய்தது. அதனைக் கண்டு மனம்பொறாத மற்றோர் ஆட்டுக்கடா, அதன்மேற் றாக்கி அதனைக் கொன்றுவிட்டது. அதனு லிறந்த அவ்வாடு, தன் தாயாகிய ஆட்டின் வயிற்றில் பாய்ந்திருந்த தாதுவிற்சேர்ந்து ஒரு ஆட்டுக்கடாவாய் வளர்ந்துகொண்டிருந்தது.

ஓர் நாள் காட்டிற்சென்று வேட்டையாடித் திரும்பிவந்த யசோமதி யரசன், முற்கூறிய தாயாகிய ஆட்டைக் கண்டு, அதனைச் சண்டமாரிக்குப் பலிகொடுத்தனன். அதன் வயிற்றினின்றும் வீழ்ந்த ஆட்டுக்கடாக்குட்டியை அருகில்நின்ற புலைக்குலத்தோ னொருவனிடம்கொடுத்து வளர்த்துவரும்படி கட்டளை யிட்டனன். மற்றோர் நாள் மன்னவன் காட்டிற்சென்று வேட்டையாடித் திரும்புகையில், சண்டமாரிக்கு எருமையொன்றைப் பலிகொடுத்தான். பலிகொடுத்த எருமை மாமிசம் சிராத்தத்திற்கு யோக்கியமானதென்று அந்தணர் அரசனுக் கறிவித்தனர்.

இன்றெ றிந்த வெருமை யிதுதனைத்
தின்று தின்று சிராத்தஞ் செயப்பெறின்
நன்றி தென்றன ரந்தணர் நல்கினார்
நின்று பின்சில நீதிக ளோதினார்.

வெய்யிலிற் காய்ந்து காக்கைகள் கொத்திய அவ்வெருமை மாமிசம் சிராத்தத்திற்கு அருகமல்லவென்று சில அந்தணர் கூறி, ஓர் ஆட்டுக்கடாவைக் கொணர்ந்து அப்புலாலை முகரும்படி செய்தால் அது பரிசுத்தமாகும் என்று அதற்கு ஓர் பரிகாரமும் கூறினர். அது கேட்ட அரசன், தான் முன் வளர்க்கும்படி சொன்ன அவ்வாட்டைக் கொணர்வித்து, அந்தணர் மொழிந்தபடியே அப்புலாலை முகரும்படிசெய்து பிறகு சிராத்தம் பண்ணினான்.

சென்று நல்லமிர் தண்டது தின்றன
ரன்று மன்னன் யசோதா னன்னையோ
டொன்றி யும்ப ருலகினுள் வாழ்கென
நன்றி சொல்லினர் நான்மறை யாளரே.

முன் யசோதா மன்னனுயிருந்து பின் வினைவயத்தால் மயிலாகவும் பன்றியாகவும் மீனாகவும் ஆட்டுக்கடாவாகவும் பிறந்திறந்து மறுபடியும் ஆட்டுக்கடாவாகப் பிறந்து அரண்மனையில் வளர்ந்துகொண்டிருந்த அவ் வாடானது, அவ் வந்தணர் கூறிய மொழிகளைக் கேட்டதும், திடீரென்று தன் முற்பிறப்புக்களெல்லாம் தன் நினைவுக்குவர, மனமுளைந்து இவ்விதம் நினைக்கலுற்றது: "இந்நகர்க் கிறைவனாகிய யசோமதி என் மகனன்றே! இவ் வுச்சயினிப்பதி எனது நகரமாகும்; இது என் மாளிகை; இவர்களெல்லாம் எனது ஏவலாளர்கள்; இதுவென் யானிவ வின்னனா மாயதே!

யான்ப டைத்த பொருட்குவை யாமிவை
யான்வ ளர்த்த மதக்களி றுமிவை
யான ளித்த குலப்பரி யாமிவை
யான்வி ளைத்த வினைப்பய னின்னதே.

இவர்கள் என் வாயில் காப்பாளர்கள்; இவர்கள் என் படைத்தலைவர்கள்; இவர்கள் எனது இசை பாடுபவர்கள்; இவர்கள் ஆடுபவர்கள்; எனது பரிவாரங்கள் இவர்கள்; என் மனைவியாகிய அமிர்தமதி என்னை நஞ்சிட்டுக் கொன்று இவ்வாறு செய்து தனது சாரத்தற் கிழவனோடு வாழ்வளோ! என்ன தீவினை செய்தனள்! இங்ஙனம் வினைவயத்தால் யான் இங்கு விலங்குகதியிற் பிறந்திறந்து பிறந்திறந்து துன்பம் நுகர்ந்து கொண்டிருக்க, புலால்தின்னும் அந்தணர்களைக்கொண்டு என்னை வகையின் மன்னவன் வானுலக துய்க்குமோ!" இன்னணம் அவ் வாட்டிற்கு எண்ணற்ற நினைவுகள் எழுந்திருந்தன.

முன் சந்திரமதி யென்னும் அரசியாயிருந்து பிறகு நாயாகவும் கரும்பாம்பாகவும் முதலையாகவும் பிறந்திறந்து மறுபடி பெட்டையாடாகப் பிறந்து சண்டமாரிக்குப் பலிகொடுக்கப்பட்டிறந்த அவ் வாடானது கலிங்கதேயத்தில் ஓர் எருமையாகப் பிறந்து வளர்ந்தது. வணிகர் அவ் வெருமையை விலைக்கு வாங்கி அதன்மீது சரக்குகளை யேற்றிக்கொண்டு பலவிடங்களிலும் சென்று வர்த்தகம் புரிகின்றவர்கள், ஓர் நாள் உச்சயினிக் கருகிலுள்ள சிருபினா யாற்றங்கரையில் தங்கி எருமையின்மீதுள்ள சுமையை யிறக்கி அதனை யிளைப்பாறவிட்டிருந்தனர். அப்

167

போழ்து அங்கு வந்த அரசனது குதிரையை அவ் வெருமை பாய்ந்து கொன்றுவிட்டது. அது பட்டத்துக் குதிரையாதலின், அது தெரிந்த அரசன் சினங்கொண்டு, அவ் வணிகர் பொருளனைத்தையும் கவர்ந்து கொண்டு அவ் வெருமையைப் பிணித்துக் கொன்றுவிடும்படி கட்டளையிட்டனன். உடனே ஏவலாளர்கள் அவ் வெருமையின் கால்களைக் கட்டி வதைத்தனர்.

காரநீரினைக் காய்ச்சி யுறுப்பரிந்
தார வூட்டி யதன்வயி றீர்ந்தவட்
சார நெய்பெய் சலாகை கடைந்தபின்
கூர்முண் மத்திகை யிற்கொலை செய்தனர்.

அமிர்தமதி அவ் வெருமைப் புலாலை யுண்டு வயிற்றை வளர்த்தனள். அவ்வளவோ டமையாது, "இன்னுமோ ராசை யெனக்குள்ளது; அரண்மனையில் வளர்ந்துகொண்டிருக்கின்ற ஆட்டுக்கடாவின் தொடையிறைச்சியைத் தின்னி னுசை சிதைந்திடும்" என்றனள்.

"அனங்க னுன பெருந்தகை யண்ணலைச்
சினங்கொ ளாவுயிர் செற்றன ணஞ்சினிற்
கனங்கொள் காமங் கலக்கக் கலந்தனள்
மனங்கொ ளாவொரு மானுட னாயினை.

அழுகி நைந்துட னஃகு மவயவத்
தொழுகு புண்ணி னுருவின ளாயினள்
முழுகு சீயின் முடைப்பொலி மேனியள்
தொழுவல் பல்பிணி நோய்களுந் துன்னினுள்."

இப்படியெல்லாம் அவ்வூரிலுள்ளவர்கள் அவளது தீய செய்கையைக் கண்டு இகழ்ந்து கூறினர்.

அமிர்தமதி கட்டளையின்படி தோழிகள் அவ் வாட்டுக்கடாவைப் பிடித்துக்கொண்டு வந்தனர். அவ் வாடு அமிர்தமதியைக் கண்டவுடனே தனக்குள் இவ்வாறு நினைக்கலாயிற்று: "அடி பாவி! அரசனுகிய என்னை வெறுத்து, அட்டபங்கன் என்னும் ஓர் பாவியைச் சேர்ந்தனை; அவன் சேர்க்கையினுலே உன்னுடல் குட்டநோயால் அழிந்துவிட்டது; பாவி யென்னையும் பற்றினை யின்னணம்; அடி பாவி! என்னையும் என் அன்னையையும் நஞ்சிட்டுக் கொன்றனை; இன்னமும் நின் பகைமை தீரவில்லையோ! வஞ்சனையே யுருக்கொண்ட மடவாய்! எருமை தூஞ்சு நின் வயிற் றென்னையுஞ் சூழ்தியோ!" என்று மொறுமொறுத்து உள்ளங் கவன்று நின்றது. வேறென் செய்யும்!

உடனே அமிர்தமதியால் அவ்வாடு கொல்லப்பட்டது. அந்த ஆடும் முற்கூறிய எருமையும் அந்நகர்ப்புறத்தேயுள்ள பறைச்சேரியில் இரண்டு அழகிய கோழிகளாகப் பிறந்தன. யசோமதி யரசன் ஒரு நாள் எப்படியோ அவைகளைக் கண்டு அவற்றின் அழகில் விருப்பங்கொண்டு, சண்டகருமனை யழைத்து அக் கோழிகளைத் தந்து இனிது வளர்த்து வரும்படி கட்டளையிட்டனன். அவ்விதமே சண்டகருமனும் அவற்றைக் கூட்டில் வளர்த்துக்கொண்டுவந்தான். அக் கோழிக ளிரண்டும் போர்த் தொழிலில் மிக்க வல்லமையுடையவைகளா யிருந்தன.

மூன்றுவது சருக்கம் முற்றிற்று.

பத்திராதிபன்.

இலக்கணப் பகுதி.

பிரயோக இலக்கணம்.

முன்னுரை.

பெரிய பாஷைகள் ஒவ்வொன்றிலும் மனிதன் நினைக்கிற ஒவ்வொரு எண்ணத்துக்கும், ஒவ்வொரு எண்ணத் தொகுதிக்கும் தனித் தனியான வார்த்தைகள் அகப்படும். நவீனமாக மேல்காட்டார் கண்டு பிடித்திருக்கிற கலைகளுக்கும், வைப்புச் சாக்குக்களுக்கும், இயற்கை விதிகளுக்கும்தான் நமது பாஷையில் பழைய பதங்கள் இல்லையே ஒழிய, மற்றக் காவிய வேதாந்த லௌகிக சம்பந்தமான சகல சிந்தியங்களுக்கும் தமிழ்ப் பாஷையில் ஒன்றல்ல, பல பதங்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு எண்ணத்தையும் குறிக்கும் பல பதங்களையும் நிகண்டுக் காரர்கள் எற்கெனவே தொகுத்துப் பலவாய நிகண்டுகள் செய்துவைத் திருக்கிறார்கள். ஆனால் இந்தப் பல வார்த்தைகளையும் தனித்தனி ஆராயும்போது அவைகளின் பொருள் ஒன்றுக்கொன்று கொஞ்சம் கொஞ்சம் பேதப்படுகின்றன என்று தெள்ளிதில் விளங்கும். பேசும் போதும் எழுதும்போதும் இந்த ஒரு பொருட்கிளவிகளை யெல்லாம் சகட்டுக்கு ஒரேரீதியாய் உபயோகப்படுத்தமுடியாது. அவைகளில் பெரும்பான்மையவைகளினிடத்துச் சூக்ஷ்மமான, ஆனல் மிகவும் தெளிவான, வெளிப்படையான, பொருள் பேதம் இருக்கின்றன. ஒரு அபிப் பிராயம், எண்ணம், அல்லது சிந்தனையைக் குறிப்பதற்கு அதற்குரியன

என்று நிகண்டுகளில் கூறியுள்ள பதங்களைப் பார்க்கும்போது சில அதிவியாப்தியானவையாயும் சில அவ்வியாப்தியானவையாயும் இருக்கும்; ஒன்றிரண்டுதான் முற்றிலும் பொருந்தினவையாக இருக்கும்.

ஆகவே, ஒரு பொருண்மொழிகளின் சூக்ஷ்மமான பேதாபேதங்களைக் காட்டும் இலக்கணம் ஒன்று தமிழுக்கு அவசியமாகவேண்டும் என்பதைப்பற்றி நாம் அதிகம் எழுதவேண்டியதில்லை.

இந்த நூல் வசனம்எழுதுபவர்களுக்குப் பிரயோசனமாகுமாறு எழுதப்பட்டு வருகிறது. இதில் காட்டப்படும் பேதங்கள் காவியம் எழுதப் புகுவோருக்கு அத்தனை பயன்படாது; ஆனால் வசன நூல்கள் எழுதுவோருக்கு மிகவும் பயன்தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் பதங்களின் பொருள்கள் வியக்தமாக விளக்கப்படுவதன்றி உதாரணங்களாலும் விளக்கிக் காட்டப்படும்.

ஸம்ஸ்கிருத பதங்களில் அநேகம் தமிழில் வரும்போது, பொருளில் சிறிது மாறுபாடு அடைகின்றன. உதாரணமாக, குரோதம் என்னும் வார்த்தை ஸம்ஸ்கிருதத்தில் கோபம் என்னும் கருத்தைக் குறிக்கும். ஆனால் தமிழில் குரோதம் என்பது தணியாக்கோபம் அல்லது சலத்தைத்தான் குறிக்கிறது. ஆகையால் இந்த நூலில் ஸம்ஸ்கிருத பதங்களுக்குத் தமிழ் நடையில் என்ன பொருள் ஏற்பட்டிருக்கிறதோ அதைத்தான் காட்டுவோமே ஒழிய ஸம்ஸ்கிருதத்திலேயே ஏற்பட்டிருக்கும் சிறப்பான பொருளைக் காட்டமாட்டோம்.

நூல்.

க. அபிப்பிராயம், எண்ணம், மதம்.

உறுதிப்பாடு ஏற்படாத விவகாரங்களில், காரண காரியங்களை யோசித்து ஒருவன் கொள்ளுகிற மனத்தேற்றம் அபிப்பிராயம் எனப்படும்.

செய்யவேண்டிய அல்லது நடக்கவேண்டிய காரியங்கள் இவ்விதம் ஆகவேண்டியது என்று ஒருவன் மனதில் கொள்ளும் உத்தேசம், அல்லது சங்கற்பம், அல்லது விருப்பத்திற்கு எண்ணம் என்று பெயர்.

அபிப்பிராயம் அறிவின் தொழில்; எண்ணமானது அகங்காரத் தன்மையின் விகாரமான உள்ளுணர்வாகும். மனிதனுடைய சித்தத்தைக் கடலுக்கு உவமித்தால், அபிப்பிராயமானது காற்றால் கிளப்பப்படும் சிற்றலைகள் போன்றதாகும்; எண்ணமானது பருவகாலங்களில் ஓங்கும் கடலின் பெருங் கிளர்ச்சியை ஒக்கும்.

அங்காரகன் முதலிய கிரகங்களில் மனிதர் வசிக்கலாகும் என்பது மேல்நாட்டு வானசாஸ்திரிகளின் அபிப்பிராயம்.

ஒருவன் கெட்டுத் தான் வாழவேண்டும் என்கிற எண்ணம் குடிப் பிறந்தார் மனதில் உதிக்காது.

தார்மீக விஷயங்களிலும் அதுபோன்ற பெரிய விஷயங்களிலும் மனிதர் கொள்ளும் அபிப்பிராயத்தை மதம் என்று சிறப்பித்துச் சொல்லுவது வழக்கம்.

உ. அன்பு, நேசம்.

அன்பும் நேசமும் ஒரு ஜீவனுக்கு வேறு ஜீவர்களிடத்தில் உண்டாகும் ஆதரவு ரூபமான மனோவிகாரம். * இவைகளில் அன்புக்கு, தனியான ஒரு ஜீவனாவது, அல்லது பொதுவாக ஜீவ சமூகமேயாவது விஷயமாக இருக்கலாம். நேசத்தின் விஷயம் எப்பொழுதும் ஒரு தனியான ஜீவன் அல்லது ஜீவர்களாகத்தான் இருக்கும்.

நேசத்துக்கு அன்னியோன்னியமும் உடன்பழக்கமும் அவசியம். தன்னிடம் அன்பு செலுத்தாதவரிடத்தும், பழக்கமில்லாதவரிடத்தும் கூட ஒருவன் அன்பு செலுத்தமுடியும். நேசம் என்னும் போது செயல் அல்லது நடவடிக்கையும் நினைவுக்கு வரும். அன்பு என்பதில் மனதின் நிலைமையேதான் அடங்கியிருக்கிறது.

புத்த பகவானும், ஸ்ரீ ராமாநுஜாசாரியரும், ஏசுகிறிஸ்துவும் அன்பே அவதாரமாகப் பிறந்தவர்கள். சம்பூரணமான அன்பு ஒன்றே மனித வாழ்க்கையின் முடிவான நலம். ஒரு குடும்பத்தில் வளரும் குழந்தைகளும், ஒரு கிராமத்தில் வசிக்கும் மனிதர்களும் ஒருவருக்கொருவர் நேசம் பாராட்டிக்கொள்ளுவதுதான் அழகு.

ங. காதல், காமம்.

காதலும் காமமும் ஸ்திரீ புருஷர்கள் ஒருவர்மேல் ஒருவர் வைக்கும் ஆசையைக் குறிக்கும். இவற்றில் காதலானது காதலன் மனதிலாவது, காதலி மனதிலாவது, அல்லது இவ்விருவர் மனங்களிலாவது நிகழ்ந்திருக்கும் உள மகிழ்ச்சியுடன் கலந்த அன்பாகும். காமம் என்பது சிற்றின்ப அனுபவ இச்சையின்பேரில் மனிதர் மனதில் பிறக்கும் ஆசை. கருத்து முற்றிய அன்புதான் காதலின் பிரதானமான பாகம்.

---

* சித்தத்தினிடத்துப் பிறக்கும் சகல வேறுபாடுகளுக்கும் அவை நல்லவையாக இருந்தாலும், தீயவையாக இருந்தாலும், விகாரம் என்று பெயர் கொடுப்பது மரபு.

அறிவிலிகட்கும் திருவிலிகட்கும் அன்பில்லாவிடத்தும் காமம் பிறக்கிறது.

காதலானது இல்வாழ்க்கையின் பரிசுத்தமான, மணம் பொருந்திய மலராகும். ஜீவகோடிகளின்பேரில் வைக்கவேண்டிய அன்புக்கும் ஈசுவரன்பேரில் வைக்கவேண்டிய பக்திக்கும் இது முதற்பாடமாகும்.

௬. நேசம், பிரேமை, வாற்சல்லியம்.

நேசம்போல பிரேமைக்கும் ஒரு தனியான ஜீவன் அல்லது ஜீவர்கள்தான் இலக்கமாகும். ஆனால் நேசத்தில் அன்னியோன்னிய பாவம் இருக்கிறது: தன்னிடம் நேசமில்லாதாரிடத்து ஒருவனுக்கு நேசம் பிறப்பதில்லே. பிரேமையானது ஒருவன் மனதில் நிறைந்திருக்கும் அன்பின் பெருக்கமே: அது தனக்கு விஷயமான ஜீவனிடத்திலிருந்து சரிசமஞன பிரேமையை எதிர்பார்ப்பதில்லே.

வாற்சல்லியம், குழந்தை என்ற பொருள்கொண்ட வத்ஸன் என்னும் பதத்திலிருந்து பிறந்த வாத்ஸல்யம் என்னும் ஸம்ஸ்கிருத மொழியின் தற்சமம் ஆகும். அது தன்னேவிடச் சிறியோரான இரத்தப் பற்றுள்ள உறவினரிடத்து நிகழும் அன்பாகும்.

௫. துரோதம் (சலம்), கோபம் (சினம்.)

கோபம் அல்லது சினமானது தனக்கு வேண்டாத காரியம் ஒன்று நிகழும்போது அந்தக் காரியத்தின் கர்த்தாவின்பேரில் ஒருவனுக்குப் பிறக்கும் மனோவிகாரமாகும். இது எப்பொழுதும் க்ஷண பங்குரமானது: அதாவது சடிதியில் வருகிறது, சடிதியில் போயும்விடுகிறது.

துரோதம் (சலம்) எப்பொழுதும் தீயவிகாரம் — பெருந்தன்மையுள்ள இருதயத்தில் பிறக்காது.

கோபம் இயற்கையில் தீயதல்ல: அதன் நன்மையும் தீமையும் அதன் விஷயத்தைக் குறித்ததாக இருக்கிறது. ராமகுணங்களே வர்ணிக்கும்போது நாரதர் 'ராமன் கோபத்தில் காலாக்கினியை ஒத்தவர்' என்று சொல்லுகிறுர்.

தன்னெதிரில் ஒரு அக்கிரமம் நடக்கும்போது அக்கிரமம் செய்பவன்பேரில் கோபம் பிறந்து அவனேத் தண்டித்து விலக்கமுயலாதவன் பேடியேயாவான்.

௬. துவேஷம், பகை, வெறுப்பு.

துவேஷம் என்பது பகைக்குச் சரியான வடமொழி. ஆனல் உலக வழக்கில் அது வெறுப்பைத்தான் பெரும்பான்மையாகச் சுட்டுகிறது.

பகை என்பது நட்புக்கு நேரான மறுதலை. குரோதம் முற்றினால் பகையாகும்.

எது புலனுக்கெதிரில் வரும்போது சித்தத்தில் துன்பம், கைப்பு, அல்லது விருசி ரூபமான சலனம் ஜனிக்கிறதோ அந்தப் பொருளின்மீது வெறுப்பு உண்டாகிறது.

எந்த மனிதன் நம்பேரில் இடைவிடாது தீங்கு சூழ்ந்துகொண்டிருக்கிறானோ அந்த மனிதனுக்கும் நமக்கும் பகை ஏற்படுகிறது.

வியாதிஸ்தனுக்குச் சோற்றைக் கண்டால் வெறுப்பாக இருக்கிறது. இதை அன்னத் துவேஷம் என்பார்கள். உண்மையான பக்தனுக்கு இதர மதங்கள் அல்லது மதஸ்தர்கள்மீது துவேஷம் உண்டாகாது. பகைமையானது மனிதரை வீழ்த்திவிடும் கோடரி. பூனைக்கும் எலிக்கும் ஜன்மப்பகை.

எ. க்ஷாத்திரம், துரோதம், ரௌத்திரம்.

தனக்கு ஒருவன் தீங்குசெய்திருந்தாலும் சரி, செய்யாமலிருந்தாலும் சரி, தீங்குசெய்திருப்பதாக நினைத்துக்கொண்டு, அதற்காகப் பழிவாங்கும் நினைவுடன் அவன்பேரில் சீறிக்கொண்டு, அவனை ஆவேசத்தோடு தாக்க இருக்கையிலும் தாக்கும்போதும் ஒருவன் மனதில் நிகழும் கோபாவேசத்துக்கு க்ஷாத்திரம் என்று பெயர். வலியினால் தாக்காமல் அபாண்டமாகப் பழிசுமத்தல் முதலிய சூழ்ச்சிகள் புரியும்போதும்கூட இவ்விதம் நிகழும் மன உக்கிரத்தையும் க்ஷாத்திரம் என்று சொல்லுவது வழக்கமாக இருக்கிறது.

துரோதத்துக்கு ௫-ம் பிரயோகத்தைப் பார்க்க. தவிர மனோதிடமும் திறலுமிலார் மனதிலும் குரோதம் நிகழும். ஆனால் திறல் அல்லது மனோதிடம் அல்லது அழுத்தம் இல்லாதவர் மனதில் க்ஷாத்திரம் பிறக்காது.

அகாதமான கோபாவேசத்துக்கு ரௌத்திரம் என்று பெயர். துரோதம் என்னும்போதும் க்ஷாத்திரம் என்னும்போதும் அவைகளின் இலக்கம் — அதாவது யார்பேரில் அவை ஜனிக்கின்றனவோ அவன் அல்லது அவர்கள் — நினைவுக்கு வரும். ரௌத்திரம் என்னும்போது அது எந்த மனதில் தோன்றுகிறதோ அந்த மனதுதான் நினைக்கப்படும்.

பீமன் குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் துச்சாதனனோடு மல் செய்யும்போது, "இவன் வேத்தவை மண்டபத்தில் துரௌபதியைத் துகிலுரிந்தவனன்றோ, ஆகையால் இவன் உயிரை இன்றே குடிப்பேன்"

என்று சங்கற்பம் செய்துகொண்டு க்ஷாத்திரத்துடன் தாக்கி அவனை வீட்டினன்.

பலீன், சடுகுடு, மல், குத்துச்சண்டை, காற்பந்து முதலிய விளையாட்டுகளில் ஒவ்வொருவனும் தன் எதிரிகளை வெல்லவேண்டுமென்ற கருத்துடன் தன் முழு வலியையும் சாமர்த்தியத்தையும் உபயோகப்படுத்தவேண்டும்: ஆனால் அவ் விளையாட்டுக்களில் தன்னை வெல்லும் எதிரிகளின்பேரில் யாருக்கும் எப்பொழுதும் க்ஷாத்திரம் ஏற்படக்கூடாது.

துச்சாதனனைக் குடர்கிழித்து அவனுடைய இரத்தத்தைப் பானம் செய்ததும் பீமன் ரௌத்திராகாரமாய் விளங்கினான். காளியும், துர்க்கையும், நரசிம்மமும் ரௌத்திரமூர்த்திகள்.

(வரும்.)

வ. வே. சுப்ரமண்ய ஐயர்.

"பாழை யென்னுஞ் சொல் வழக்கு."

(காலஞ்சென்ற பண்டிதர்
மாகறல் கார்த்திகேய முதலியார் எழுதியது.)

மொழி நூலில் பாஷையென்னுஞ் சொல்லுக்குப் பாழையென்னுஞ் சொல்லை வழங்கியிருப்பது நன்றாக இல்லையென்றும், அது கூடாதென்றும் கூறுவர் ஒருசாரார். பாழை யென்பது தமிழ்ச் சொல்லாயும் தமிழ்க்கு அழகு செய்வதாயும் இருத்தலால் அது கூடுமென்பர் ஒருசாரார். பாஷை யென்பது வடசொல்லாதலால் தமிழ் நடைப்படி தமிழ்ப் பாடையெனின் அது அமங்கலப் பொருளையும் தருதலால் தமிழ்ப் பாஷை தமிழ்ப் பாடையென்னும் இருவகை உச்சரிப்பினும் தமிழ்ப் பாழை யென்னும் உச்சரிப்பே நவின்றோர்க் கினிமை பயத்தல் முதலிய அழகு உடையதாகுமென்பர் ஒருசாரார்.

சிவஞான முனிவர் முதலியோர் பாஷை யென்பதற்கு மொழி யென்று வழங்கியிருக்கின்றார்கள். ஆகலின் தமிழ் மொழியெனின் தடைகூறுவார் ஒருவருமிலர். தமிழ்ப் பாழையெனின் தடைகூறுவார் சிலருளராகின்றனர். அவரும் அச் சொல்வந்த காரண முதலியன உணருவாராயின் அன்புகூர்ந்து மகிழ்கூர்ந்து இனிதுடன் படுவராவர். தேவாரத்தில் பழந் தக்க ராகம், பழம் பஞ்சுரம், நட்ட பாடை, (நட்ட பாஷை) யென்னும் பண்கள் வந்திருக்கின்றன.

பழந் தக்க ராகம் ௩ பதம்
பழம் பஞ்சுரம் ௨ பதம்
நட்ட பாடை ௨ பதம்

பழம் + பஞ்சுரம்
பழம் = இசை

பல் – பன் = இசை. பள்ளர் = உழவர்.. இசைபாடி உழுவோ ரென்பது பொருள். பள் – பளம் = இசை, ஒலி. பல்லி பளபளெனச் சொல்லிற்று, பளீரென அடித்தான்.

பளம் – படம் = இசை.
படபடெனப் பேசினன்.

“படமலி தமிழிசை பாவ வல்லவர்” (திருவிடைமருதூர் ச – தே)
படம் – படகம் = ஓர் வாச்சியம். இசைப்பதென்பது பொருள்.

“கத்தரிகை துத்தரி கறங்குதுடி தக்கையொடு இடக்கைபடகம்” (திருவேதவனம் ச – தே)

தக்கம் – தக்கை = ஓர் வாச்சியம்.
பளம் – பழம் = இசை.

இப் பழமென்னும் சொல்லுதான் பாழையாயிற்று.

பழம் – பாழை = இசை, மொழி.
நட்ட பாழை நட்ட பாடையாயிற்று.
நட்ட பாடை நட்ட பாஷையாயிற்று.

நட்ட பாஷையென்பது நட்ட பாடையாயிற்றெனல் கூடாது.

ஈண்டுப் பாஷையென்பது பண்ணெனக. சித்தர்களும் பரிபா ஷையைப் பரிபாழை என்பர். மதுரைக் கலம்பகத்து உரையிலும் ஓரிடத் துப் பாழையென்னும் சொல் வந்திருக்கின்றது உள்ளது நாற்பதிலும் உள்ளது.

இனி ழகாம் டகாமாதல் இலக்கண முறைமையா? ஷகாம் டகா மாதல் இலக்கண முறைமையா எனின், ளகாம் டகாமாதலாலும் ழகாம் ளகாத்தினின் றுண்டானபடியாலும் ளகாம் டகாமாதல்போல ழகாமும் டகாமாகும்.

உ–ம் “திகடரு சடைமுடி யடிகள்” (திருச்சேறை – சம் – தே)

திகழ் + தரு = திகடரு
திகழ் + தசக்கர = திகட சக்கர

ஷகாரம் டகாரமாகுமா? ஷகாரத்துக்கும் டகாரத்துக்கும் சம்பந்தம் உண்டா எனின்?

ச, ய, ஸ, ஷ, இவை ஒன்றுக்கொன்று சம்பந்தமான எழுத்தான படியால் அச் சம்பந்தத்தின்படியே பாஷை யென்பது பாசையாகும். பாடையாகமாட்டாது. டகாரத்தில் தகர மிருக்கின்றபடியாலும் வித்து விச்சு முதலியனபோலத் தகரத்துக்கும் சகாரத்துக்கும் சம்பந்த மிருக்கின்றபடியாலும் அதன்படி பாடையென்பது பாஷையாகும்.

* ள் + த = ட

ளகாரமும் தகாரமும் சேர்வதால் டகர முண்டாயது. இதனுல் சகரமும் டகாரமும் ஷகாரமாகுமென்பதும் டகரம் ழகாரமாகாமைபோல ஷகாரம் டகாரமாகாதென்பதும் விளங்குமாறு காண்க.

ஷகர வுச்சரிப்புடைய சொற்கள் சகர டகர வுச்சரிப்புடைய சொற்களின் சிதைவெனல் வேண்டும். ழகாரம் டகாரமாகும், டகரம் ழகாரமாகாது ஷகாரமாகும்.

உ-ம். புழலை – புடலை, வேடம் – வேஷம்.

இன்னும் கண்டகம் கந்துகமாகும், பிண்டிபாலம் பிந்திபாலமாகும், கந்துகம் கண்டகமாகாது, பிந்திபாலம் பிண்டிபாலமாகாது. ட, ண, ள, ழ, என்பவை நடுநாக்கானது மேல்வாயின் நடுவைப் பொருந்துதலால் உண்டாதலாலும், ஷகாரமும் அவ் விலக்கண முடைமையாலும் டகாம் ஷகாரமாகும்.

இவ் வாராய்ச்சியால் பழமென்னும் இசையின் பெயர் பாழையாயிற்றென்றும், பாழை பாடையாயிற்றென்றும், பாடை பாஷையாயிற்றென்றும் கொள்ளவேண்டும்.

இன்னும் ஷகாரமென்னும் எழுத்து சத்த சுரங்களுண்டான காலத்துக்குப் பிறகே உண்டாயினதென்பர். அஃதுண்மையே. § "சரிகமபதநி" என்னும் சத்த சுரங்களும் சட்ச முதலியவற்றின் முதலெழுத்தாதலால் இச் சுரங்க ளுண்டானகாலத்தில் சட்டி சட்சம் என்னும் உச்சரிப்புதான் இருந்ததெனப் புலனுகின்றது. சட்சம், ஸட்சம், "ஸரிகமபதநி" ஷட்சம் என்னும் அதாவது ஷகார வுச்சரிப்பு அக்காலத் திருக்குமாஞல் ஷட்சம் என்பதன் முதலெழுத்து ஷகாரமாதலால், "ஷரிகம

* மொழி நூல் இலக்கண வியல் கஉ-ம் பக்கம் மெய்ச்சந்தி எழுத்து பார்க்க.

§ மொழி நூல் பாயிர வியல் சுடு-ம் பக்கம் பார்க்க.

பதநி" என்றிருத்தல் வேண்டும். இனி ஷ ஸ யோரபேதமெனினும் சங்கீதப் புலவர்கள் ஒப்பமாட்டாராதலால் அதுவும் பொருந்தாது.

எக்காலத்திலேனும் "ஷரிகமபதநி" என்னும் சுரநடையிருந்ததா? ஆராய்ந்து கூறுக. இதனால் ஷகரமானது சத்த சுரங்களுண்டான காலத்துக்குப் பிறகு ஸகரத்தினின்று உண்டான எழுத்தேயென்பது வலியுறுகின்றது.

ஸ — ஷ

ஷ ஷ்டி: ஷ ட்ச: என்பன பிற்காலத்து வழக்கு.

ஷகாரம் டகாரமாவதற்கு இலக்கண முறைமையில்லை. இனிப் பாழி பாழையாயிற்றெனலும் ஒக்கும். பாழி = குகை, குகையிலுண்டானதென்பது பொருள். இது பொருத்தக் கூறலென்னும் உத்தி. இகரம் ஐகாரமாகும் முசலி முசலை யென்பதுபோல, பாழையென்னும் சொல் வந்த காரண முதலியன அறிந்துகொள்க.

பழந்தக்கராகம், பழம் பஞ்சர மென்பவற்றுள் பழமென்பதற்கு வேறு வேறு பொருள் கூறுவர். அது பொருந்துமாறில்லை.

சாத்திரப் பகுதி.

முக்திகோபநிஷத்.

(வெண்டாமரை ச, இதழ் எ, 155-ம் பக்கத் தொடர்ச்சி.)

(சரூப மனோநாசனத்திற்கு இலக்கணம் கூறுகின்றார்.)

௩௯. ஜீவன்முக்தனுடைய அந்த மனமானது மறுபடியும் ஜன்மங்களினால் விட்டுவைக்கப்பட்டதாகும். இந்நிலை சரூபத்தோடு கூடின மனோநாசனமாகும். இது ஜீவன்முக்தனுக்கேயுள்ளது.

மறுபடியும் ஜென்ம பரம்பரைகளின்றி ஜீவன்முக்தனுடைய மனது உபாதி நசிக்கும்வரையில் சரூபமாகவிருந்தும் இல்லாததுபோல் மானச வியாபாரம் நசிக்கும்; அந்த நாசத்திற்கே சரூப மனோநாசனமென்று பெயர்; அது ஜீவன்முக்தனுக்கேயுள்ளது என்றுணர்க.

௪௦. உருவமில்லாத மனோநாசனமானால் விதேக முக்தியடைந்ததாகும்.

உருவமில்லாமல் மனது சேஷமின்றி நசித்தல் விதேகமுக்தி; இவ் விதேகமுக்தியுடையவனுக்கு மனது உருவமில்லாமல் நசிக்கும்; கர்ப்பூர தீபம் கர்ப்பூரமுள்ளவரையில் பிரகாசித்து அது நசித்தவுடனே மகா தேஜோரூபத்தை யடையுமென்றாரென்க.

(மனதினுடைய மலின வாசனாவஸ்தையைச் சம்சார விருக்ஷத்திற்குக் காரணமாகச் சொல்லுகின்றார்.)

௪௧. அநேக சகஸ்ரங்களான காமாதிகளென்னும் அங்குரங்கள், சுவர்க்க நரகாதிகளென்னும் கிளைகள், சரீரங்களென்னும் மரம், சுக துக்கங்களென்னும் பழங்கள், ஈஷணாத்திரயமென்னும் தளிர்கள் இவற்றையுடைய இந்தச் சம்சாரமென்னும் விருக்ஷத்திற்கு இந்த மனமானது காரணமாகின்றது.

இராகத் துவேஷாதிகளை முளைகளாகவும், சுவர்க்க நரகாதிகளைக் கிளைகளாகவும், சுக துக்கங்களைப் பழங்களாகவும், ஈஷணாத்திரயங்களைத் தளிர்களாகவும் பெற்று அநாதியாயும் அநந்தமாயுமுள்ள இச் சம்சார விருக்ஷத்திற்கு மனமே முக்கிய காரணமாயிருக்கின்றது. அபரோக்ஷ சாக்ஷாத்காரமாகும்வரையில் இதற்கு எதனாலும் பங்கமில்லை. புத்திமான்கள் இம்மனதின் துன்பத்தை யறிவார்களாதலின் இத்துக்க நிவர்த்திக்காக வழிதேடி ஞானம் சாதனமாக அவலம்பித்தார்களென்றாரென்க.

௪௨. அந்த மனதைச் சங்கல்பாத்மகமாகவே நான் நினைக்கின்றேன். சங்கல்பம் நசித்தவுடனே அம் மனது இராது. எப்படி முற்கூறிய சம்சார விருக்ஷம் உலர்ந்துபோகின்றதோ அப்படியே சங்கல்பரூபமான அம் மனதைச் சீக்கிரமாக உலர்ந்துபோகும்படி செய்க.

இந்த மனது சங்கல்பரூபமானதாதலின், சங்கல்பங்களை உலரச் செய்தால் மனது நசிக்கும்; மனம் நசிக்கவே சம்சார விருக்ஷம் கூட உலர்ந்து நசிக்குமென்றாரென்க.

(சங்கல்ப ரூபமான மனோநாசனத்திற்கு உபாயம் என்னவென்று கேட்க, அவ் வுபாயத்தைச் சொல்லுகின்றார்.)

௪௩. தனது மனத்தினுடைய நிக்கிரகத்தில் ஒரே உபாயமுண்டு. மனதினுடைய விருத்திரூபமாகத் தோன்றுதலே நாசம். மனதினுடைய நாசமே பெரிய மோக்ஷரூபமான சிரேயோ லாபம்.

தனது சங்கல்பரூபமான மனதினுடைய நிக்கிரகத்தில் ஒருபாயமே யுண்டு. மனது விருத்திரூபமாக உதிப்பதே பரமார்த்தம் தெரியாமல் கெட்டுப்போவதற்குக் காரணம். மனது விருத்திரூபமாக நசிப்பதே மோக்ஷரூப சிரேயசினுடைய உதயத்திற்குக் காரணம். மனது

தான் நசித்தல்லாமல் மோக்ஷத்தைத் தரமாட்டாது. தானிருக்க மோக்ஷமில்லை யாதலின் அதன் நாசத்திற்குப் பிரயத்தனிக்க வேண்டுமென்று ரென்க.

(எவர் மனது நசிக்கும், எவர் மனது நசிக்காது, என்று வினவ, சொல்லுகின்றார்.)

சச. ஞானியினுடைய மனது நாசத்தை யடைகின்றது. அஞ்ஞானிக்கு மனது விலங்கல்லவா. ஒன்றாகிய தத்துவத்தினுடைய திடமான அப்பியாசத்தினாலே எதுவரையில் மனது வெல்லப்படாதோ அதுவரையும் இரவில் வேதாளங்களென்னும் பிசாசங்கள்போல இதயத்தில் மலினவாசனைகள் சஞ்சரிக்கின்றன.

ஞானியினுடைய மனது நசிக்கும்; அஞ்ஞானியினுடைய மனது விலங்கைப்போல் பந்தமாக இருக்கும்; ஏக தத்துவ விஷய திட அப்பியாச எதுவான மனோஜயம் எதுவரையில் இல்லையோ அதுவரையில், இராக்காலத்தில் பயங்கரமாக வேதாள முதலிய கிரகங்கள் சஞ்சரித்து உலகத்திற்குத் துன்பமுண்டாக்குவதுபோல, இதயத்தில் வாசனைகள் சஞ்சரித்துக்கொண்டு ஜன்ம ஜராமரண துக்கங்களெனும் சந்தாபங்களை யுண்டாக்கும் என்றாரென்க.

(இந்த மனப்பிரதிபந்தகம் எவ்வாறு நசிக்குமென்ன, சாதனம் கூறுகின்றார்.)

சடு. மிகவும் க்ஷீணித்த மனக்கொழுப்பும் வெல்லப்பட்ட இந்திரியங்களென்னும் சத்துருக்களும் உண்டாகப்பெற்ற அப்பியாசியினுடைய போக வாசனைகள், பனிக்காலத்தில் தாமரைகளின் தலைபோல நசிக்கின்றன.

தத்துவஞானத்தில் ஒன்றினிடத்துத் திட அப்பியாசம் செய்தலினாலே பனிக்காலத்தில் தாமரைகள் தலைபோல, இந்திரியங்களையும் மனதையும் ஜயித்துக் கிருதார்த்தனானவனுக்கு, வாசனைகள் அனைத்தும் அழிந்துபோகும் என்றாரென்க.

மனது வெல்லப்படாமற்போனால் மீண்டுமீண்டும் மனதை அசுப வாசனைகளினின்றும் நீக்கிச் சுபவாசனாவிருத்தியை யடையச்செய்தல் வேண்டும்; ஆதலின் தத்துவஞானமும் வாசனாக்ஷயமும் பரஸ்பர சககாரிகள் என்பது கருத்து.

(வரும்.)

ஓர் ஆரியன்.